

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 152 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 26 – வியாழக்கிழமை 11 ஜனவரி 2024 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 152 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 26 - Thursday 11 January 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## அனைவர்க்குமான ‘திராவிட மாடல்’ அரசு

# சிறுபான்மையினர் நலனில் சிறப்பு கவனம் செலுத்துகிறது!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.1.2024) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், அரசு துறைச் செயலாளர்கள், கிறிஸ்தவ திருச்சபைகளின் பேராயர்கள், அருட்சகோதரிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜன. 11 -**

**“அனைவர்க்குமான திராவிட மாடல் அரசு சிறுபான்மையினர் நலனில் சிறப்பு கவனம் செலுத்துகிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (9.1.2024) தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு :-

நமது திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதிலும், அவர்களது சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதிலும் எப்போதும் கவனமாக உள்ளது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

சிறுபான்மையின மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் சமமான வாய்ப்பை வழங்கியும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதிசெய்தும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்தியும், சிறுபான்மையினருக்கு ஒரு வளமான எதிர்காலத்தினை உருவாக்குவதில் எங்களது அரசு பெரும் பங்காற்றி வருகிறது என்றால், அது மிகையல்ல.

### கிறிஸ்தவ மக்களுக்கு எண்ணற்ற அறிவிப்புகள்!

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது முதல்,

- **கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் மேம்பாட்டுக்காக நல வாரியம்**
- **சிறுபான்மையினர் விடுதி மாணவ - மாணவியர்க்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு**
- **கரூர், மதுரை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஒரு கிறிஸ்தவ உதவிச் சங்கம் கூடுதலாக துவங்கிட நிதி ஒதுக்கீடு**
- **ஜெருசலேமுக்கு புனிதப் பயணம் செல்வதற்கு அருட் சகோதரிகள், கன்னியாஸ்திரிகளுக்கு வழங்கப்படும் மானியம் உயர்வு**
- **தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் அதிகக் கடன்கள்**

என நமது திராவிட மாடல் அரசின் சார்பில் கிறித்தவ மக்களுக்காக எண்ணற்ற அறிவிப்புகள் வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் மணிமகுடமாக, கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை வழங்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தனித்தீர்மானம் கொண்டு வந்து நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

இப்படி எண்ணற்ற திட்டங்களை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது காலம் தொட்டு, நாங்கள் சிறுபான்மையினரின் நலனைக் கருத்தில்கொண்டு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையாக, உறுதியோடு செயல்படுத்தி வருகிறோம்.

### எண்ணற்ற திட்டங்கள்!

அந்த வகையில், இங்கே நீங்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையிலும், கோரிக்கைகளின் அடிப்படையிலும் அரசு சார்பில் நாங்கள் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து உங்களுக்குக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

- **உபதேசியார்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் தளர்வு செய்யப்பட்டு, அது இம்மாத இறுதிக்குள் தொடங்கப்படும்.**
- **கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் பெறுவதற்கு இணைய வழியில் விண்ணப்பித்து சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கான Web Portal இந்த மாதத்திற்குள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**
- **கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் செல்வதற்கு அரசு நிதியுதவி வழங்குவதற்கு திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளும் (Revised Guidelines) இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும்.**
- **கிறித்துவக் கல்லறைகளில் மீண்டும் ஒரு உடலை அடக்கம் செய்வதற்கு தற்போதுள்ள விதிகளைத் தளர்த்தி சவப்பெட்டியில்லாமல் புதைக்கப்பட்ட இடத்தில், 12 மாதங்களுக்குப் பிறகு வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;**

**மரத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் புதைக்கப்பட்ட இடத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு அதே குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;**

**உலோகத்தினால் செய்யப்பட்ட சவப்பெட்டியில் புதைக்கப்பட்ட இடத்தில், ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு அதே குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவரின் சடலத்தைப் புதைக்க அனுமதி அளிக்கும் ஆணையையும்;**

**சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள கிறித்துவக் கல்லறையில் இருப்பதைப் போன்று உடல்களை அடுக்ககப் பெட்டகங்களில் அடக்கம் செய்ய அனுமதியளிக்கும் ஆணையையும் இந்த வார இறுதிக்குள்ளாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

### வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி!

இந்தப் புதிய விதி, தமிழகத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகியவற்றில் உள்ள கிறித்துவக் கல்லறைகளுக்குப் பொருந்தும். கிறித்தவர்களுக்கான

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## பில்கிஸ் பானு வழக்கு:

# இறுதியில் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது!

### உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

**சென்னை, ஜன. 11 -**

**சகோதரி பில்கிஸ் பானு வழக்கில் நீதி நிலை நாட்டப் பட்டிருப்பது ஆறுதல் அளிக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

சகோதரி பில்கிஸ் பானு வழக்கில் இறுதியில் நீதி நிலை நாட்டப்பட்டு இருப்பது ஆறுதல் அளிக்கிறது. இருள் சூழ்ந்த வேளையில் நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது.

குஜராத் மாநில பா.ஜ.க. அரசு, உண்மைகளை மறைத்து குற்றவாளிகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறது என்று உச்சநீதிமன்றம் இடித்துரைத்திருப்பது, அரசியல் இலாபங்களுக்காக நீதி வளைக்கப்பட்டதை வெளிச்சம் போட்டுக் காட்டி இருக்கிறது.



தங்களுக்கு வேண்டியவர்கள் என்றால் உண்மைகளை மறைத்து, நீதிமன்றத்தையே தவறாக வழிநடத்தி கொடுங் குற்றவாளிகளை விடுவிக்க பிரயத்தனம் செய்யும் பா.ஜ.க. ஆட்சியாளர்கள், எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் நீண்டகால சிறைவாசிகளை நன்னடத்தையின் அடிப்படையிலும் வயது மூப்பு கருதியும் சட்டபூர்வமாக முன்விடுதலை செய்யும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவது அவர்களது இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது.

“நீதி கிடைத்தது கண்டு கண்ணீர் மல்கினேன்; என் குழந்தைகளைக் கட்டி அணைத்துக் கொண்டேன்; ஒரு பெரிய மலையையே என் மேல் இருந்து அகற்றியது போன்ற உணர்வை பெறுகிறேன். இப்போதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறேன்” என்று சகோதரி பில்கிஸ் பானு அவர்கள் கூறியுள்ள வார்த்தைகள் அவர் பட்ட இன்னல்களை விவரிக்கின்றன.

நீதி கேட்டு அவர் நடத்திய நெடும்பயணத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி, பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஊக்கத்தையும் போராடும் மன உறுதியையும் தருவதாகும். அஞ்சாமலும் சலிப்பின்றியும் அவர் நடத்திய போராட்டம் வரலாற்றில் நிலைத்து நிற்கும். அவருக்கும் அவருக்கு துணையாக நின்ற மூத்த வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் அனைவருக்கும் என் பாராட்டுகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## பொங்கல் பரிசுத் தொகுப்பு – ரூ.1,000 :

# அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 11 -**

**அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000 ரொக்க பணத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக ரூ.1,000 வழங்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில், பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நிபந்தனையின்றி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக ரூ.1000 வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். அத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு ஆகியவையும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக வழங்கப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

## உலக முதலீட்டாளர்கள் மாநாடு:

# எல்லா மாவட்டங்களுக்குமான பரவலான வளர்ச்சி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

*சென்னை, ஜன. 11 -*

*தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு எல்லோருக்கும் எல்லாம்; எல்லா மாவட்டங்களுக்குமான பரவலான வளர்ச்சி என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*

*இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-*

*தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு (TNGIM2024)ஐ இந்தியாவே வியக்க வெற்றிகரமாக நடத்திக்காட்டிய தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி!*

*இருநாள் மாநாடு 20 ஆயிரம் தொழில்துறைப் பிரதிநிதிகள் பங்கேற்புடனும், 39 லட்சம் மாணவர்கள் பார்வையிடவும் பல புதுமைகளோடு தமிழ்ப் பண்பாட்டின் பெருமிதங்களைப் பறைசாற்றி நடந்தேறியுள்ளது.*

*நமது திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு இளைஞர்களும் மகளிரும் உயரும் திட்டங்களையும் செயல்களையும் செயல்படுத்தி வருகிறோம். அதில் மிகப்பெரிய பாய்ச்சல் தான், இந்த தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு (TNGIM2024)*

*‘எல்லோருக்கும் எல்லாம்’,*

*‘எல்லா மாவட்டங்களுக்குமான பரவலான வளர்ச்சி’*

*என்ற நமது பயணத்தில் இது முக்கிய மைல்கல்!*

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 11-01-2024

# உலகத்தை ஈர்த்த தமிழ்நாடு

உலகத்தை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி மதிப்பிலான முதலீடுகளைப் பெறும் அளவுக்கு உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது தமிழ்நாடு. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து 'திராவிட மாடல்' விழுமியங்களுடன் முதலமைச்சர் நாற்காலியில் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அமர்ந்த பிறகு ஏற்பட்ட மாற்றங்கள் இவை.

**ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன் என்றும், 27 தொழிற்சாலைகளைத் திறந்து வைத்திருக்கிறேன் என்றும் முதலமைச்சர் அவர்கள் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லி இருக்கிறார்கள். இதன் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

'முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு' என்ற பெயரில் முதலீட்டாளர்கள் மாநாடுகள் நடத்தப்பட்டன. அதன் மூலமாக ஒரு லட்சத்து 90 ஆயிரத்து 803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இதன் மூலமாக 2 லட்சத்து 80 ஆயிரத்து 600 பேருக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றார்கள். இதன் மூலமாக 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் வந்தன. இப்போது நடந்திருப்பது மூன்றாவது பெரிய முயற்சி ஆகும்.

கடந்த 7, 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடந்த இரண்டு நாள் மாநாட்டின் மூலமாக , இறுதி செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவாக, 6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். " இந்தியாவே உற்றுநோக்கும் இந்த அவையில் பெரும் மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்" என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

இந்த முதலீடுகள் மூலம், நேரடி வேலைவாய்ப்பு என்ற வகையில், 14 லட்சத்து 54 ஆயிரத்து 712 நபர்களுக்கும், மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில், 12 லட்சத்து 35 ஆயிரத்து 945 நபர்களுக்கும் என மொத்தம் 26 லட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப் போகிறது.

ஒரு துறையில் இருந்து மட்டுமல்ல, பல்வேறு துறைகளின் மூலமாக முதலீட்டை ஈர்த்துள்ளது தமிழ்நாடு.

* **தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பாக, 3 லட்சத்து 79 ஆயிரத்து 809 கோடி ரூபாய் முதலீடுகள்**
* **எரிசக்தித் துறை சார்பாக 1 லட்சத்து 35 ஆயிரத்து 157 கோடி ரூபாய் முதலீடுகள்**
* **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பாக 62 ஆயிரத்து 939 கோடி ரூபாய் முதலீடுகள்**
* **தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பாக 22 ஆயிரத்து 130 கோடி ரூபாய் முதலீடுகள்**
* **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பாக 63 ஆயிரத்து 573 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைத்துள்ளன.** இவை அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் மீதும், தி.மு.க. அரசின் மீதான நல்லெண்ணத்தின் வெளிப்பாடுகள் ஆகும். தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் தொடர்ச்சியான முயற்சியின் மூலமாக இது சாத்தியம் ஆகி உள்ளது.

**தமிழ்நாடு என்பது 'குண்டு சட்டிக்குள் குதிரையை ஓட்டும்' மாநிலம் அல்ல. அப்படி எப்போதும் இருந்தது இல்லை. 1996-2001 காலக்கட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சராக தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோது தான் சென்னையைச் சுற்றிலும் காஞ்சிபுரம், திருவள்ளூர், சோளிங்கநல்லூர் என பல்வேறு தொழிற்சாலைகளை உலக நிறுவனங்கள் வந்து தொடங்கியது. தகவல் தொழில்நுட்பத்தை மற்ற மாநிலங்கள் உணர்வதற்கு முன்பே, 'டைட்டல் பார்க்' தொடங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ் நெட் மாநாட்டை 1999 ஆம் ஆண்டே நடத்தியவர் முதலமைச்சர் கலைஞர். தமிழை கணினி மொழியாக ஆக்கியது அவரது சிந்தனை.**

தமிழ் நிலத்தில் கால் பதித்து நின்று உலகத்தைப் பார்ப்பதே தமிழனின் அறிவு ஆகும். 'திரைகடலோடி திரவியம்' தேடியவர்கள் நாம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலகப் பொதுமை மானுடப் பண்பை விளக்கிய கணியன் பூங்குன்றனின் வார்த்தையே தமிழர்களின் வாழ்க்கை ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்த தமிழினம் தொழில் துறையிலும் மேன்மை கொண்டதாக இருந்தது.

நெசவு, முத்துக்குளித்தல், தச்சு, கப்பல் கட்டுதல், மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், கட்டுமானம், பருத்தி, பட்டு உற்பத்தி என பல்வேறு தொழில்களை செய்தவர்கள் மட்டுமல்ல,அந்தத் தொழில்களை ஆதி காலத்தில் இருந்து கடல் கடந்தும் போய்ச் செய்தவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். கப்பல்களின் மூலமாக உலகத்தின் பெரும்பாலான நாடுகளுக்குச் சென்றார்கள். சீனா, கிரீஸ், ரோம், எகிப்து, பாலஸ்தீனம், மெசபடோமியா, பாபிலோனியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தார்கள். தமிழகப் பொருள்களான இஞ்சி, மிளகு, ஏலம், இலவங்கம் ஆகியவற்றுக்கு மேற்கு ஆசிய நாடுகளில் அதிகமான தேவை இருந்தது. இப்பொருள்களை வாங்கிச் செல்ல கிரேக்கம், ரோமாபுரி வணிகர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து சென்றார்கள். தங்கத்தைப் பெற்றுக் கொண்டு மிளகை ஏற்றுமதி செய்தவர்கள் தமிழர்கள். இப்படி தனித்த தொழில் வளத்தைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு.

தானும் வளர்ந்து, இந்தியாவையும் வளர்த்து, உலகத்தையும் வளர்த்த வளர்க்கும் மாநிலம் தான் தமிழ்நாடு. அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை தமிழ்நாடு இப்படித் தான் செயல்பட்டு வருகிறது. இதனைத் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், " **உங்கள் எல்லோரையும் நான் தொழில்முனைவோராக மட்டுமல்ல - தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்களாக பார்க்கிறேன். எனவே, தமிழ்நாட்டை உலகுக்கு அறிமுகம் செய்யுங்கள். உலக நாடுகளை தமிழ்நாட்டுக்கு அழைத்து வாருங்கள்**" என்று அழைப்பு விடுத்துள்ளார்கள்.

**தமிழ்நாட்டுக்குள் உலகம் வந்துவிட்டது. உலகின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு உறுதியாக உயரும் காலம் வெகுதூரத்தில் இல்லை.**



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்தார்கள். உடன் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, பொதுப்பணித்துறை செயலாளர், சுற்றுலா மற்றும் அறநிலையங்கள் துறை செயலர் உடன் உள்ளனர்.

## முன் எப்போதும் இல்லாத அளவுக்கு

# முதலீடுகளை ஈர்த்திருக்கும் திராவிட மாடல் அரசு!

## கட்சித் தலைவர்கள் பாராட்டு !

**சென்னை. ஜன.11-**

**"முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முதலீடுகளை ஈர்த்திருக்கும் திராவிட மாடல் அரசு" என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.**

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு!



உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மிகப் பெரிய சாதனையை நிகழ்த்தி உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் இறுதிசெய்யப்பட்ட மொத்த முதலீடுகள் முன் எப்போதும் இல்லாத அளவாக 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாயாக அதிகரித்திருப்பதாக முதலமைச்சர் அறிவித்திருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக வைகோ தெரிவித்துள்ளார். 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்துள்ளதை எண்ணி தமிழகம் பெருமை கொள்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட மாடல் அரசினை திறம்பட வழிநடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் சாதனை தமிழ்நாட்டு வரலாற்றில் வைர எழுத்துக்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று வைகோ குறிப்பிட்டுள்ளார். தொழில் வளர்ச்சி மூலம் பொருளாதார நிறைவு காணவும், இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தரவும், நாட்டை வலுவான பாதைக்கு அழைத்துச் செல்லவும் அரும்பணி ஆற்றிவரும் முதலமைச்சருக்கு தம்முடைய அன்பான பாராட்டுகள், வாழ்த்துகள்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு தெரிவித்துள்ளார்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வரவேற்பு!



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதிய முதலீடுகள் ஈர்த்து & வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிக்கு வரவேற்பு. தமிழ்நாடு அரசு கடந்த 07.01.2024 மற்றும் 08.01.2024 தேதிகளில் நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

இதன் மூலம் ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டு, சுமார் 30 லட்சம் புதிய வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது

முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மீது தனி கவனம் செலுத்தி அவைகளை நடைமுறைப் படுத்த சிறப்புக் குழுக்கள் அமைக்கப் பட்டிருப்பது நம்பிக்கையூட்டும் நடவடிக்கையாகும்.

உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக அமைய முதலமைச்சர் நேரடியாக அவர்களை சந்தித்து உரையாடியதும், தொழில் துறை அமைச்சர், நிதியமைச்சர் உள்பட உயர் அதிகாரிகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அவர்களது எதிர்பார்ப்புகளை அறிந்து கொண்டு, அழைத்ததும் வெற்றிக்கு அடிப்படையாகும். ஒவ்வொரு ஒப்பந்தமும் கால வரம்பு நிர்ணயித்து நிறைவேற்றுவதில் முனைப்பு காட்ட வேண்டும்.

தமிழ்நாடு அரசு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கி முன்னேற முதலமைச்சரும், அரசும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பாராட்டி, வரவேற்கிறது,

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கில்

# பதில் மனு தாக்கல் செய்ய முடியாதவர்கள் எதற்கு வழக்கு தொடர்ந்தீர்கள்?

## அமலாக்கத்துறைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி கேள்வி!

சென்னை, ஜன. 11 -

பதில் மனு தாக்கல் செய்ய முடியாதவர்கள் எதற்கு வழக்கு தொடர்ந்தீர்கள் என்று செந்தில் பாலாஜி ஜாமீன் வழக்கில் நீதிமன்றம் அமலாக்கத்துறையிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

போக்குவரத்துத் துறையில், சட்ட விரோதமாகப் பணப்பரிமாற்றம் செய்ததாகப் பதியப்பட்ட வழக்கில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 14ம் தேதி அமலாக்கத்துறையால் அமைச்சர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு பலமுறை தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், செந்தில் பாலாஜி தரப்பு ஜாமீனுக்காக உச்சநீதிமன்றத்தை நாடினர்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு உச்சநீதிமன்றத்தில் கடந்த நவம்பர் மாதம் 28ம் தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வழங்க மறுப்பு தெரிவித்திருந்தனர்.

மேலும் மருத்துவ காரணங்களுக்காக அல்லாமல் தகுதியின் அடிப்படையில் மட்டுமே ஜாமீன் மனுவை பரிசீலிக்க முடியும். மேலும் கீழமை நீதிமன்றத்தில் வழக்கமான ஜாமீன் மனுவைத் தாக்கல் செய்ய அமைச்சர் செந்தில் பாலாஜி தரப்புக்கு நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

இதனையடுத்து ஜாமீன் மனுவை அமைச்சர் செந்தில் பாலாஜியின் தரப்பு திரும்பப் பெற்றுக்கொண்டது.

இதையடுத்து, அமைச்சர் செந்தில் பாலாஜி மீண்டும் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு தொடர்பாக அமலாக்கத்துறை பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கு விசாரணையை நேற்றைக்கு ஒத்தி வைத்திருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த வழக்கை சிறிது நேரம் ஒத்திவைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். இதற்கு சென்னை மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, அமைச்சர் செந்தில் பாலாஜி வழக்கில் ஏற்கனவே பதில் மனுத்தாக்கல் செய்ய உத்தரவிட்டோம். இதுவரை ஏன் பதில் மனுத் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய முடியாதவர்கள் எதற்காக வழக்கு தொடர்கிறீர்கள் என அமலாக்கத்துறைக்கு சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ்காந்தி 'நீட்விலக்கு நம்இலக்கு' முன்னெடுப்பில் தனது பங்களிப்பாக 49000 கையெழுத்துகள் பெற்று ஒப்படைத்தார்!

## எத்தனை கடினமான சூழ்நிலை இருந்தாலும் நம் வருங்காலத் தலைமுறைக்கு

# நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தரவேண்டுமென்ற எனது கனவு பலன் தருவதில் மகிழ்ச்சி!

## ‘காலை உணவுத் திட்டம்’ குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜன. 11 –**

**மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்படும் காலை உணவுத் திட்டத்தை, நிறைவேற்றுவதில் எத்தனை கடினமான சூழ்நிலை இருந்தாலும் நம் வருங்காலத் தலைமுறைக்கு நல்ல எதிர் காலத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற எனது கனவு கண் முன்னே பலன் தருவது கண்டு மகிழ்கிறேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**




முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தால் மாணவர்கள் பயன்பெற்று வருவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அடித்தட்டு மக்களின் ஏற்றம், எல்லோருக்கும் எல்லாம் என் பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் நமது திராவிட மாடல் அரசு, கல்வியும் சுகாதாரமும் இரு கண்கள் எனப் போற்றி முன்னுரிமை அளித்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. ஒரு குழந்தைகூட பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடக் கூடாது, போதிக்கும் வேளையில் ஊன்றிப் பாடங்களைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, நாட்டுக்கே முன்னோடியாக, கடும் நிதிநெருக்கடிக்கு இடையிலும் செயல்படுத்தி வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நாட்டு மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் அன்றாடப் பணிச் சுமையைக் குறைத்து இருக்கிறது.

இன்று தினத்தந்தி குழுமத்தின் சார்பில் வெளியாகும் DT Next நாளேட்டில் வந்த செய்தி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கிறது!

மாணவச் செல்வங்கள் படிப்பைப் பாதியில் கைவிடுவதை இந்தத் திட்டம் தடுத்து நிறுத்தியது மட்டுமன்றி, பள்ளிக்கூடங்களிலும் சமுதாயத்தில் பல நற்பயன்களுக்கு வித்திட்டு வருகிறது.

தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குச் சிற்றுண்டி உண்ட பின், மீதமிருக்கும் உணவு வீணாவதில்லை; மாறாக, ஆறாம் வகுப்பு முதல்



### Ripple effect for b'fast scheme on school campuses

NIRUPA SAMPATH

CHENNAI: The Chief Minister's Breakfast Scheme, since its implementation in September 2022, has not only been instrumental in bringing down dropouts in primary classes but has also been creating a positive ripple effect within school premises and society overall.

Several teachers and members of Self Help Groups (SHGs), speaking to DT Next, said the food never gets wasted. "Instead, we go ahead and distribute it among children of other classes who have reported to school without having breakfast," said a teacher.

Many students of classes 6 to 10, especially in government schools in north Chennai, also said they have eaten breakfast at the school in several instances. Several students and teachers from other TN districts also share similar stories. Aimed at controlling the surging rate of malnourishment and high prevalence of anaemia among TN students, the State government announced the scheme in May 2022. Subsequently, the scheme was introduced for students between classes 1 to 5 in all government schools.

Currently, catering to over 1.14 lakh primary school students studying in 1,545 government schools, the scheme is functional at Rs 33.56 crore. Though the government has made an assurance that the scheme will be extended to other schools in a phased manner, the teachers have already begun to see the positive impact.

The scheme was launched for students of classes 1 to 5

A government school teacher in Korukkupet said, "Once we finish serving students of classes 1 to 5, we quickly check which students of other classes have missed breakfast and serve the rest to them. Over time, we have noticed a greater impact of this practice here and elsewhere."

Interestingly, speaking about how his mother leaves home for work early in the morning, a class 9 student in Tondiarpet government school said, "As my mother finds it difficult to cook breakfast on most days, I have had breakfast at school after the intervention of my school head. There are many students like me, who, for their own reasons, come to school without breakfast. Hence, it is vital to extend the scheme for all classes."

Explaining how these initiatives create a deep impact in society, a city-based educationalist and child rights activist said, "Though the impact of such schemes cannot be measured in numbers, they hold great value and certainly create a powerful ripple effect in society. Feeding every student is vital, especially those who come from backgrounds that cannot afford it for various reasons. The government should extend the scheme to other higher classes and aided schools as well."

mkstalin 09.01.2024

10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியரில் யார் காலை உணவு சாப்பிடாமல் வந்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு அந்த உணவை வழங்குகின்றனர் என்ற செய்தி அறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். காலையில் வேலைக்குச் செல்லும் தனது தாயால் சமைக்க முடியவில்லை என்பதால் பசியோடு பள்ளிக்கு வந்த ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஒருவன், பள்ளியில் பகிர்ந்தளிக்கப்படும் சிற்றுண்டியை உண்பதாகக் கூறியதைப் படிக்கும்போது நெகிழ்ந்தேன். அவரைப் போல, பசியோடு வரும் பல மாணவர்களும் உணவருந்திய பின் வகுப்புக்குச் செல்கிறார்கள் என்பதைக் கண்டு, ஒரு நல்ல நோக்கத்தோடு செயல்படுத்தப்படும் திட்டம், மேலும் பற்பல சமூக நன்மைகளுக்கு வித்திடுகிறது நிறைவைத் தருகிறது. உணவை வீணாக்காமல், பகிர்ந்தளிக்கும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எத்தனைக் கடினமான சூழ்நிலை இருந்தாலும் நம் வருங்காலத் தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற எனது கனவு, கண் முன்னே பலன் தரும்போது ஏற்படும் மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# ‘புதுமைப் பெண்’ திட்டத்தில் சேர்ப்பது குறித்து நல்ல செய்தி வரும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி/நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- கோயில், மசூதி, தேவாலயம், குர்த்வாரா போன்றவற்றின் மூலம் பொது நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், முறைப்படுத்துதல், மறு இருப்பிடம் செய்தல் தொடர்பாக விரிவான கொள்கை அரசால் உருவாக்கப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதிலும் பல இடர்ப்பாடுகளைக் களைந்து, ஒரு நிலையான இயக்க நடைமுறை (SOP) வெளியிடப்படும். இதற்காக உயர்மட்ட அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- அரசு சாரா நிறுவனங்களுக்கான மானியத் தொகையை எந்தவித தங்கு தடையுமின்றி, விரைந்து வழங்குவதற்கு ஏதுவாக, உரிய இணைய வழி முகப்பு உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- இல்லங்கள் மற்றும் விடுதிகளுக் கான உரிமம் பதிவு மற்றும் புதுப்பித்தல் குறித்து தேவையான அனைத்துச் சான்றிதழ் மற்றும் அனைத்து ஆவணங்கள் வழங்கப்பட்டவுடன் குறுகிய காலத்திற்குள் உரிமம் வழங்கப்படும்.
- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் வழங்கப்படும் அரிசி போன்றவை இல்லங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறுவது தொடர்பாக மாநில அளவில் உள்ள துறைகளின் மூலம் இதற்கான விநியோக அனுமதி மற்றும் குறைத்தீர்வு வழிமுறைகள் (Grievance redressal mechanism) வழங்கப்படாமல் மாவட்ட ஆட்சியரின் மூலமே இதற்கான முன்னெடுப்புகள் நடைமுறைப்படுத்தப்படும்.
- அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs), வானவில் மன்றம், தேன் சிட்டு மலர், கலைத்திருவிழா போன்ற திட்டங்கள் படிப்படியாக செயல்படுத்துவது குறித்து சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.
- அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற மாணவிகள் புதுமைப்பெண் திட்டத்தில் சேர்த்தல் குறித்து நிதி நிலை அறிக்கையில் நல்ல செய்தி வெளிவரும்.
- கிராமப்புறங்களில் உள்ள அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மை யினர் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டி திட்டம் விரிவாக்கம் குறித்து வரும் நிதி நிலை அறிக்கையில் சாதகமாக பரிசீலிக்கப்படும்.
- அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியாளர் நிர்ணயம், பணி நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்தல், பணியிட மாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் குறித்த கோரிக்கைகளுக்கென தனியாக ஒரு இணையதள வசதி ஏற்படுத்தப்படும்.

**மானியங்கள் பெற நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படும்!**

- பள்ளிக்கல்வித் துறையில், அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகையான ஆசிரியர்கள் நேரடி நியமனத்திற்கான உச்ச வயது வரம்பினை பொதுப்பிரிவினருக்கு 53 எனவும், இதரப் பிரிவினருக்கு 58 எனவும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வயது வரம்பு அரசின் நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.
- சிறுபான்மையினரின் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில், யு.ஜி.சி. மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழகம் மற்றும் அரசால் மூன்று மாத காலத்திற்குள் நியமன அங்கீகாரம் அளிக்கப்படும்.
- மாநில அரசால் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மதசார்பு சிறுபான்மையினர் (Religious Minority) அந்தஸ்து சான்றிதழ் தற்போது ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இனிவருங்காலங்களில் இச்சான்றிதழ் காலம் குறிப் பிடப்படாமல் நிரந்தர சான்றிதழாக வழங்கப்படும்.
- சமூகநலத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை ஆகிய துறைகளின் கீழ் உதவி பெறும், அரசு சாரா தொண்டு நிறுவனங்களைப் பதிவு செய்தல், உரிமங்களைப் புதுப்பித்தல், நிதியுதவி மற்றும் மானியங்களைப் பெறுவதற்கானநடைமுறைகள்ஆகியவை எளிமைப்படுத்தப்படும்.

**கோரிக்கைகளைக் கேட்க திறந்த மனதோடு இருக்கிறேன்!**

இதற்கென பிரத்யேகமாக ஒரு இணையதளம் உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது நான் குறிப்பிட்ட விவரங்களில் இடம்பெறாத உங்கள் கோரிக்கைகள் மற்றும் கருத்துகள் மீதும் அரசு உரிய கவனம் செலுத்தி அவற்றிற்கும் விரைவில் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது அனைத்துக் கோரிக்கைகளையும் கேட்க திறந்த மனத்தோடு இருக்கிறேன்.

உங்களது பிரதிநிதியாகவே கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் இருக்கிறார்கள். மேலும், தொடர்புடைய அரசு செயலாளர்களிடம் உங்கள் கோரிக்கைகளை வழங்கலாம். உரிய நேரத்தில் அவற்றை பரிசீலித்து, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதி யளிக்கிறேன்.

திராவிட மாடல் அரசின் இந்தப் பணித் தொய்வின்றித் தொடரும் என்று கூறி, அதற்கு உங்களது ஒத்துழைப்பினைத் தொடர்ந்து தாருங்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.01.2024) கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 நடைபெறவுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்படும் நுங்கம்பாக்கம், டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் ஆய்வு மேற்கொண்டார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்களும் இருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (09.01.2024) கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023க்கான சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் புதிதாக அமைக்கப்படும் செயற்கை ஓடுதளம் பாதையை ஆய்வு செய்தார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்களும் இருந்தனர்.



சென்னை வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (09.01.2024) பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற முன்னாள் அரசு பள்ளி மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பான “விழுதுகள்” தொடக்க விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னாள் மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி மா.ஆர்த்தி, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (விருப்ப ஓய்வு), பொது நூலக இயக்குநர் க. இளம்பகவத், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிடும் வகையில், சேப்பாக்கம் பகுதி, 62 (அ) வட்டக்கழகத்திற்குட்பட்ட, சிந்தாதிரிப்பேட்டை சாமி தெரு பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் 1000 பேருக்கு அரிசி, வெல்லம், புத்தாடைகள் உள்ளிட்ட பொருள் தொகுப்புகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு, மதன்மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனுள்ளனர்.

### தொ.மு.ச. - ஐ.என்.டி.யு.சி. தொழிலாளர்களால் 95 சதவிகிதம் பேருந்துகள் இயக்கம்!

# அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தோல்வி!

## மக்களுக்கு இடையூறு இல்லாமல் பேருந்துகள் இயக்கிய அனைத்து தொழிலாளர்களுக்கும் ஐ.என்.டி.யூ.சி நன்றி!

சென்னை, ஜன.11-

ஐ.என்.டி.யூ.சி தொழிலாளர் சம்மேளனம் போக்குவரத்து பேரவை முதன்மை பொதுச்செயலாளர் ந.க. நாராயணசாமி, பேரவை கௌரவத் தலைவர் மு.பன்னீர்செல்வம் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவரும் பேரவைத் தலைவருமான டாக்டர். எம்.கே. விஷ்ணுபிரசாத் எம்.பி. வழிகாட்டியின் பேரில் அனைத்து அன்பான வேண்டுகோளை ஏற்று போக்குவரத்து தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு வேலை நிறுத்த நோட்டீஸ் வழங்கினோம். கூட்டமைப்பின் மூலம் அரசின் கவனத்தை ஈர்க்க பல்வேறு போராட்டங்களையும் நடத்தினோம். அரசும் முக்கியமான கோரிக்கைகளை ஓய்வூதியர்களுக்கு 8 ஆண்டுகாலமாக வழங்காமல் இருக்கின்ற பஞ்சப்படியை முதலில் அறிவிக்க வேண்டும். (Implement) 15வது ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தை தேதியையும் அறிவிக்க வேண்டும் என்று கூறினோம். அதை முன்னிட்டு மக்கள் முன் நோட்டீஸ் வழங்கி அவர்களின் கவனத்தையும் ஈர்த்தோம். இதற்காக நடந்த சமரச பேச்சு வார்த்தையிலும் சேர்ந்தும் DCLல் நமது நிலைபாட்டை தெரிவித்தோம்.

ஆனால் 10 ஆண்டுகாலம் ஆட்சியில் இருந்த அ.இ.அ.தி.மு.க அரசு எதையும் கண்டுகொள்ளாமல் நம்மைப் பழிவாங்கியது என்பது தொழிலாளர்கள் அனைவரும் அறிந்ததே.

ஆட்சியில் இருந்தபோது அ.இ.அ.தி.மு.க அரசு அரசியல் நோக்கத்தோடு கண்டும் காணாமல் இருந்துவிட்டது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஆதாயம் தேட அரசியல் காரணத்திற்காக தன்னோடு சில சங்கங்களை இணைத்துக் கொண்டு ஜனவரி 9 ஆம் தேதி வேலை நிறத்தம் செய்வதாக அறிவித்து. நோட்டீஸ் வழங்கியது.

அதேநேரத்தில் தொழிலாலளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று எங்களது கூட்டமைப்பும் அறிவித்திருந்தோம்.

ஆனால் அவர்கள் ஆட்சிகாலத்தில் எதையுமே செய்யாத அ.இ.அ.தி.மு.க. வோடு கூட்டணி தர்மத்தையும் மீறி சி.ஐ.டியும் அவர்களோடு இணைந்து பேட்டி கொடுப்பதும் துணையோடு போராட்டத்தில் ஈடுபடுவதும் ஏற்புடையதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எதிரிகளுடன் கைகோர்த்துப் போராடுவது நமது கூட்டணிக் கட்சிகளை பாதிக்கும்.

தி.மு.க. அரசு இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த போதெல்லாம் நமக்குச் செய்த நன்மைகளை எல்லாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேபோன்று கண்டிப்பாக நமது கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து அரசு அறிவிக்கும் என்று முழுமையாக நம்புகிறோம்.

தி.மு.கஅரசும் தமிழ்நாடு முதலமைச்சரும் என்றைக்கும் தொழிலாளர்கள் மீது பாசம் கொண்டவர்கள்.

போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் அவர்களும் தொழிலாளர்கள் மீது கருணைகொண்டவர்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுளோம் அதற்கான நிவாரண பணிகளை அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழர்களின் தலையாய பண்டிகை தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை குடும்பத்தோடு தமிழக மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்று உழவர் திருநாள் பண்டிகை கொண்டாவியிருக்கும் இந்த நேரத்தில் போராட்டம் நடத்துவதை தவிர்த்துவிடுங்கள். பொங்கல் பண்டிகை முடிந்தபிறகு அழைத்துப் பேசுகிறோம். என்ற அமைச்சரின் நியாயமான கோரிக்கையை ஏற்றும், பொங்கல் பண்டிகை நேரத்தில் பேருந்து வேலை நிறுத்தம் நடத்தினால் தமிழ்நாடு மக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடம் என்பதாலும் அமைச்சர் அவகாசம்தான் கேட்கிறார். இல்லை என்று இதுவரை சொல்லவில்லை. எனவே இதையெல்லாம் கவனத்தில் கொண்டுதான். அரசுபேருந்து வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை பேரவை எடுத்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

தொ.மு.ச., ஐ.என்.டி.யூ.சி தொழிலாளர்கள் இதை எண்ணிப் பார்த்துதான், இன்றைக்கு 95 சதவீதம் அளவிற்கு பேருந்துகளை இயக்கினார்கள். இன்றைய வேலைநிறுத்தம் பிசு பிசுத்தது, மக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் பேருந்துகளை இயக்கிய அனைத்து தொழிலாளர்களுக்கும் ஐ.என்.டி.யு.சி பேரவை சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றைக்கும் நாம் எதையும் விட்டுக் கொடுக்கத் தவறியதில்லை.

தொழிலாளர்கள் நலனுக்காக அரசுக்கு என்றும் நாம் துணைநின்று கோரிக்கைகளை வென்றெடுப்போம்.

உறவுக்குக் கை கொடுப்போம் தொழிலாளர்களின் உரிமைக்கு என்றும் குரல் கொடுப்போம்.

இவ்வாறு தொழிற்சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# அவசரப்பட்டு விட்டார்கள் போக்குவரத்து தொழிலாளர்கள்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை. ஜன.11-

அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி வருமாறு:-

பில்கிஸ் பானு வழக்கு தொடர்பான கேள்விக்கு, நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து விமர்சிக்கின்ற உரிமை யாருக்கும் கிடையாது. சரியா தவறா எனவும் விமர்சிக்கின்ற உரிமை தனி நபருக்கு கிடையாது.

ஒரே நாடு ஒரே தேர்தல் எந்த அவசரக் கதியில் கொண்டுவரப்பட்டாலும் நிச்சயமாக இந்த நாடாளுமன்ற தேர்தலுக்குள் கொண்டுவரப்பட முடியாது. அதற்குப் பிறகு இந்தியா கூட்டணி தான் ஆட்சிக்கு வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம்...

போக்குவரத்து தொழிலாளர்களின் 6 கோரிக்கைகளில் இரண்டை நிறைவேற்றுவதாக அரசு உறுதியளித்துள்ளது. போக்குவரத்து துறை அமைச்சர் பேச்சுவார்த்தையின் போது பொங்கலுக்குப் பிறகு மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என கூறினார். போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு எந்த மறுப்பும் அரசு தெரிவிக்கவில்லை.

பேச்சுவார்த்தைக்கு பிறகு தான் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்பது பற்றி பிறகு தான் தெரியும், அதற்குள் போக்குவரத்து தொழிலாளர்கள் அவசரப்பட்டு விட்டார்கள் என்பது என்னுடைய கருத்து.

பொங்கலுக்கு பிறகுதான் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சனைக்கு தீர்வு காணுவோம் என்று அமைச்சர் கூறிய நிலையில் அதற்கு முன்னரே பேச்சுவார்த்தை தோல்வி என தொழிற்சங்கங்கள் அறிவித்துவிட்டது. தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது வருந்தத்தக்கது...

இந்திய துணை கண்டத்திலேயே இத்தகைய சிறப்பு மிகுந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடந்ததாக வரலாறு கிடையாது. 6.5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு தொழில் முதலீட்டாளர்கள் , முதலீடுகளை கொண்டு வந்துள்ளனர். இது மட்டுமின்றி 27 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கி தர இருக்கிறார்கள். படித்த இளைஞர்களுக்கு பொற்காலத்தை உருவாக்குவதற்காக முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்துள்ளது.

தொடர்ந்து முதலமைச்சர் தளபதி அவர்களை அண்ணாமலை விமர்சித்து வரும் நிலையில், தமிழகத்தை முன்னேற்ற பாதையில் முதலமைச்சர் எடுத்து செல்வதாக மத்திய அமைச்சர் பியுஸ் கோயல் பேசியது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர் எஸ்.ரகுபதி, அவருக்கு உண்மை தெரிந்துள்ளது சொல்லி இருக்கிறார். மற்றவர்களுக்கு அதை ஏற்றுக் கொள்ளலாம் மனமில்லை. அதனால் மறுத்திருக்கிறார்கள் என்றார்.

இவ்வாறு செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்தார்.

# பள்ளிக்கல்வித்துறையின் “எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி”!

## திருவாரூரில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,ஜன11.

திருவாரூர் மாவட்டம், அம்மையப்பன் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் எங்கள் பள்ளி, மிளிரும் பள்ளி நிகழ்ச்சியினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ மற்றும் கல்வி அதிகாரிகள் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியானது, 08.01.2024 முதல் 10.01.2024 வரை சிறப்பு பள்ளி தூய்மை பணி செயல்பாடுகள், பள்ளிகள்தோறும், தூய்மையை தொடருவோம் வாருங்கள் என்ற தலைப்பில் மாவட்டத்திலுள்ள 945 ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் நடைபெறுகிறது. கொரடாச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கலியபெருமாள், ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஆர். பாலசந்தர், முதன்மை கல்வி அலுவலர் புகழேந்தி, மாவட்ட கல்வி அலுவலர் மாதவன், வட்டாட்சியர் நக்கீரன், ஒன்றியக்குழு உறுப்பினர் சண்முகம், ஊராட்சிமன்ற தலைவர் முருகதாஸ், பள்ளி தலைமையாசிரியர் அருளாளன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 51வது வார்டு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி **நிரஞ்சனா ஜெகதீசன்** அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 09.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் !

# புதுக்கோட்டை வடக்கு - கீரனூரில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - கவிச்சுடர் கவிதைப்பித்தன் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 11-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றியங்கள் , கீரனூர் பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் 8.1.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் பழைய சந்தைப்பேட்டை கீரனூரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், என். சேட்டு, ஓ.எஸ். வெங்கடாசலம், சி. சண்முகம், கீரனூர் பேரூர் கழகச் செயலாளர் பி.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்றது.

கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி கலந்து கொண்டு கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களை வாழ்த்தியும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்கள் எளிதில் உள்வாங்கி கொள்ளும் வகையில் விளக்கியும் சிறப்புரை யாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர்ஒன்றிய பெருந்தலைவர் கே. ஆர்.என்.போஸ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் செ. அசோக் பாண்டியன், மாவட்ட பொருளாளர் எம்.லியாக்கத் அலி, பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் த.செல்வம், பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத் தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இராம.செல்வராஜ், கீரை.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திரசோழன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், கவிஞர் மரிய எட்வின், வழக்கறிஞர் மணிகண்டன், வழக்கறிஞர் ராஜேஷ், சொ.தமிழினியன், எழில் ராஜா, ஒன்றிய கழக நிர்வாகிகள் டி.முத்து, கே.ஆர்.பாலமுத்து, க.வீரையா, ராஜராஜசோழன், ராஜ்குமார், சினன்ப்பா, முத்து ராங்கியர், பி.சி.என்.கண்ணன், அழகு.ராஜேந்திரன், வி. எஸ்.பழனி, கருணாநிதி, முத்துக்குமார், திவ்ய நாதன், க.செ.கலியமூர்த்தி, இளைஞர் அணி நிர்வாகிகள் ந.அம்பலவாணன், ச. ரமேஷ், அஸ்வின், டி. கே.டி.வல்லரசு, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் செ.குறிஞ்சிவாணன் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் பேரூராட்சி சமுதாய கூடத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிச்செல்வன், மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.க.ந.கோகுலப்பிரியா, விராலிமலை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.காமு.மு.பி.மணி, ஒன்றியக் குழு உறுப்பினர் மு.பி.ம.சத்தியசீலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# திருவொற்றியூரில் புதிய வகுப்பறைகள் திறப்பு!

சென்னை, ஜன.11–

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய். 99 லட்சம் செலவில் திருவொற்றியூர் காலடிப்பேட்டை சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டும் பணியை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் துவங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.இராமநாத ன், கழக செயற்குழு உறுப்பினர் இரா.முருகேசன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், 14வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## அரூர் கே.ஆர்.சுப்பிரமணி

### சனவரி 11 (2020)



**1968ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்திலேயே, இந்தித் திணிப்பை எதிர்த்து மொரப்பூர் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.**

**1974ல் அரூர் நகரில் ‘இளைஞர் தி.மு.க.’ அமைப்பை தொடங்கி மாவட்டம் முழுவதும் கழகக் கொள்கை பரப்ப துவங்கிய இவர், அரூர் ஒன்றிய துணை துணைச் செயலாளர், பேரூர்ச் செயலாளர், இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணி மற்றும் தொண்டர் அணி அமைப்பாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**கறுப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் அரசாணை எரிப்புப் போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், கலைஞர் கைது எதிர்ப்பு மற்றும் ராணிமேரி கல்லூரி பிரச்சினையில் கழகத் தலைவர் கைது எதிர்ப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், பொங்கல் திருநாளை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடந்தது. இதில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் நல உதவிகளை வழங்கினர். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் காமராஜ், சிறுபான்மை நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் அ.சுபேர்கான், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உள்ளூர் - வெளியூர் அனைத்து வழித்தடங்களிலும்

# பேருந்துகள் முழுமையாக இயக்கப்படுகிறது!

## போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜன. 11 -

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பொது மக்கள் அச்சமில்லாமல் பயணம் செய்ய ஏதுவாக உள்ளூர் மற்றும் வெளியூர் செல்லும் பேருந்துகள் அனைத்து வழித்தடங்களிலும் முழுமையாக (96.03 சதவீதம்) இயக்கப்பட்டு வருகிறது என போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பொது மக்கள் பாதுகாப்பாகவும், அச்சமின்றியும் பேருந்துகளில் பயணம் செய்ய ஏதுவாக, முழுமையாக பேருந்துகளை இயக்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், உள்ளூர் மற்றும் வெளியூர் செல்லும் பேருந்துகள் அனைத்து வழித்தடங்களிலும் முழுமையாக இயக்கப்பட்டு வருகிறது.

மேலும், இப்பேருந்துகள் இயக்கம் தொடர்பாக, கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் மற்றும் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு முனையம் கிளாம்பாக்கத்திலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரடியாக ஆய்வு மேற்கொண்டார்.

எனவே, பயணிகள் எந்தவித அச்சமின்றி, பாதுகாப்புடன் பயணம் மேற்கொள்ள அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது, மேலும், அனைத்து போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர்கள், நடத்துனர்கள் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ளனர், பேருந்துகள் இயக்கத்தினை அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து போக்குவரத்துக் கழக பணியாளர்கள் முழுமையாக கண்காணித்து பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவாரூர் மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், ஜன. 11 -

திருவாரூர் தி.மு.க. மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்து மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர்தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின் படி, நமது திருவாரூர் மாவட்ட தி.மு.கழக செயல்வீரர்களின் கூட்டம் நாளை (12.01.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணிக்கு கொரடாச்சேரி வீ.ஆர்.என்.திருமண அரங்கில் நடைபெற இருக்கிறது.



கூட்டத்திற்கு மாவட்ட தி.மு.கழக அவைத்தலைவர் திரு.க.தன்ராஜ் அவர்கள் தலைமை ஏற்கிறார். கூட்டத்தில் எதிர்வரும் 21.01.2024 அன்று சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் இரண்டாவது எழுச்சி மாநாடு குறித்தும், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா குறித்தும், தி.மு.க. திருவாரூர் மாவட்டக்கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசனைகள் நடைபெற இருக்கிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் , தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் இந்த கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பெரம்பலூரில் “சட்டமன்ற நாயகர் கலைஞர்!” கருத்தரங்கம்!

## வெற்றி பெற்றவர்களுக்கு பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பரிசு வழங்கினார்!

பெரம்பலூர், ஜன. 11 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ”சட்டமன்ற நாயகர் கலைஞர்” என்ற தலைப்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி மாணவர்களுக்கு சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், பள்ளி மாணவர்களுக்கு தந்தை ஹேன்ஸ் ரோவர் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்ற கருத்தரங்கங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி தலைமையேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் விழாக் குழு உறுப்பினர் ஞானசேகரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி தெரிவித்ததாவது:

முத்தமிழ் அறிஞர், முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் என்னென்ன திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பெற்றுள்ளனர் என்பது குறித்து கருத்தரங்கில் பங்கேற்று பேசிய மாணவ - மாணவிகள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தனர். கலைஞர் அவர்கள் ஆரம்பப் பள்ளி மட்டுமே படித்திருந்தாலும் அவருக்கென தனி பேச்சாற்றல் எழுத்தாற்றல் என எல்லா திறமைகளும் இருந்தது. 13 தேர்தல்களில் தொடர்ச்சியாக போட்டியிட்டு தோல்வி அடையாத ஒரே ஒரு தலைவர். அவரைப் போல ஒரு தலைவன் இந்தியாவில் அல்ல உலகிலேயே கிடையாது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சட்டசபையில் மக்கள் பிரச்சினைகளை பேசுவதற்கு அதிகமான வாய்ப்புகளை தருவார். அதோடு மட்டுமில்லாமல் தன்னை சந்திப்பதற்கு முன் அனுமதி கொடுத்து இருந்தால் குறித்த நேரத்தில் அனைவரையும் சந்திப்பார். மக்களோடு மக்களாக இருந்த தலைவர், நேரம் தவறாது இருந்த தலைவர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் இயற்றிய திட்டங்கள் அனைத்தும் இந்தியாவையே வழிநடத்தக் கூடிய திட்டங்களாக இருந்தது. அவர் அறிவித்த அனைத்து திட்டங்களும் இந்திய மக்களின் அனைவருக்குமான திட்டங்களாக இருந்தது. எனவே எதிர்காலத்தில் சட்டமன்ற நாயகர் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் போல மாணவர்களாகிய நீங்களும், திறமைகளை வளர்த்துக் கொண்டு ஒவ்வொரு மாணவர்களும் எழுச்சியோடு நாட்டின் வரலாறுகளை மற்றவர்களுக்கு சொல்லக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாக வளர வேண்டும் என தெரிவித்தார்.

கல்லூரி மாணவர்களுக்காக போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி பூஜா, என்பவருக்கு ரூ.3 ஆயிரம் , இரண்டாம் பரிசுபெற்ற செல்வி நா.லத்திகாஸ்ரீநிதி என்பவருக்கு ரூ.2 ஆயிரம், மூன்றாம் பரிசு பெற்ற செல்வி கீர்த்தனா, செல்வி ஹர்ஷவர்த்தினி, செல்வன் ஐயப்பன் ஆகிய மூன்று நபர்களுக்கு தலா ரூ.1000ம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் சட்டமன்றப் பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி வழங்கினார்.

அதேபோல, பள்ளி மாணவர்களுக்காக போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வி செ.பார்க்கவி என்பவருக்கு ரூ.3 ஆயிரம், இரண்டாம் பரிசுபெற்ற செல்வி சா.ஆதாம்கனி என்பவருக்கு ரூ.2ஆயிரம், மூன்றாம் பரிசு பெற்ற செல்வி அ.அஞ்சலி, செல்வி க.வர்ஷா, செல்வி அ.அகல்யா ஆகிய மூன்று நபர்களுக்கு தலா ரூ.1000ம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் சட்டமன்றப் பேரவை துணைத்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற கூடுதல் செயலாளர் பா.சுப்ரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, சட்டமன்ற இணைச்செயலாளர் மு.கருணாநிதி, துணைச்செயலாளர் சுமதி, சார்புச் செயலாளர் த.பாஸ்கரன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தழுதாழை பாஸ்கர், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் மீனா அண்ணாதுரை,(பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), பெரம்பலூர் நகர்மன்ற துணை த்தலைவர் து.ஹரிபாஸ்கர் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக நெசவாளர் அணி செயலாளர்

# சிந்து ரவிச்சந்திரன் தாயார் தனபாக்கியம் தேவராஜன் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஜன. 11 -

கழக நெசவாளர் அணி செயலாளரும், தொண்டாமுத்தூர் தேர்தல் பொறுப்பாளருமான சிந்து ரவிச்சந்திரன் தாயார் திருமதி தனபாக்கியம் தேவராஜன் வயது 85. வயது மூப்பின் காரணமாக கோபிசெட்டிபாளையம் களங்கியம் தங்கமலை காடு பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம் .



அண்ணாருக்கு சிந்து ரவிச்சந்திரன், சேகர் என்கிற இரு மகன்கள் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், பொதுமக்கள் பலர் அன்னாரின் உடலுக்கு மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்கு புதன் கிழமை காலை 9 மணி அளவில் கோபி மின் மயானத்தில் நடைபெற்றது.



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட

### “உடன்பிறப்புகளாய் இணைவோம்”என்ற மாபெரும் முன்னெடுப்புடன்

### “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு”

### புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## (மூன்றாம் கட்டம்)

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் - புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநில அமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு.கழகம்.

“தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டி காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப் படுத்த, மேலும் ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்க “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட பேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜீன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதிய உறுப்பினர்களைக் கழகத்தில் இணைத்திடுவோம்.” என **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற ‘தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்’ நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதி முதல் 2023 ஜீன் 3ஆம் தேதி வரை, **“முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு”** உறுப்பினர்களை சேர்த்தல் பணிகளை **”உடன்பிறப்புகளாய் இணைவோம்”** என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒரு கோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்ற படிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

முதற் கட்டமாக, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் எண்.1000 வரை** இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் கடந்த 7.11.2023 முதல் 10.11.2023 தேதிகளில் முதற்கட்டமாகவும்; 27.12.2023 முதல் 30.12.2023 வரை இரண்டாம் கட்டமாகவும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;

தற்போது, **மூன்றாவது கட்டமாக**, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 2101 முதல் 2800 வரை** எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2024 ஜனவரி 11ஆம் தேதி முதல் 13ஆம் தேதிக்குள்**, தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரி பார்த்து பெற்றுச் செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெற முடியாத நிலை ஏற்படுமாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவார காலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பி வைத்திட வேண்டும்.**

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள்
### தலைமைக் கழக இரசீது எண். 2101 முதல் 2800 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) காஞ்சிபுரம் வடக்கு
9) காஞ்சிபுரம் தெற்கு
10) இராணிப்பேட்டை
11) வேலூர்
12) விழுப்புரம் தெற்கு
13) தஞ்சை மத்திய
14) அரியலூர்
15) கரூர்
16) புதுக்கோட்டை தெற்கு
17) சேலம் மத்திய
18) கோவை தெற்கு
19) கோவை மாநகர்
20) திருப்பூர் தெற்கு
21) மதுரை வடக்கு
22) மதுரை தெற்கு
23) மதுரை மாநகர்
24) விருதுநகர் தெற்கு
25) தூத்துக்குடி வடக்கு

**குறிப்பு :** தலைமைக் கழக இரசீது எண்.2801க்கு மேல் உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட இரசீது எண் 1001 முதல் 2100 வரையிலான உறுப்பினர் உரிமைச் சீட்டு பெற்றுக் கொண்டு செல்லாதவர்கள் உடனடியாக தலைமைக் கழகத்திற்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
09 - 01 - 2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் .எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0 மற்றும் வேளாண்மை உழவர் நலத் துறை திட்டங்கள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர்.எல்.சுப்பிரமணியன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர்.ச.நடராஜன், கோ தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தாதேவி, , மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து லந்து கொண்டனர்.



திருச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே என். நேரு நேற்று (10.01.2024) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பு காவிரி ஆற்றில் மீன் வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாட்டு இன மீன் குஞ்சுகளை இருப்பு செய்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம். பழனியாண்டி, மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி சேர்மன் துரைராஜ், கதிர்வேல் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### திரைப்பட விருதுகள் – திரைப்பட மானியம் –

# சின்னத்திரை விருதுகளுக்கான விண்ணப்பம்: கால அவகாசம் நீட்டிப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன.11-

தமிழ்நாடு அரசு வழங்கும் திரைப்பட விருதுகள், திரைப்பட மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகளுக்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கு கால அவகாசம் நீட்டிப்பு செய்து அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு அரசின் சார்பில் 2019 முதல் 2022 வரை திரைப்பட விருதுகள், 2018 முதல் 2022 வரை குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் மற்றும் 2015 முதல் 2022 வரை சின்னத்திரை விருதுகள் வழங்குவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 24.11.2023 முதல் 08.01.2024 மாலை 5.00 மணி வரை பெறப்படும் என ஏற்கனவே நாளிதழ்களில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த காலக் கெடுவை நீட்டித்து வழங்க வேண்டும் என்கிற திரையுலகத்தினரின் கோரிக்கையினை அரசு கனிவுடன் பரிசீலனை செய்து விண்ணப்பங்கள் பெறப்படும் நாளினை 31.01.2024 அன்று மாலை 5.00 மணி வரை நீட்டித்துள்ளது.

பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் உறுப்பினர்செயலாளர், திரைப்படத் துறையினர் நலவாரியம், முதல் தளம், மாநில செய்தி நிலையம், கலைவாணர் அரங்க வளாகம், சென்னை600 002 என்ற முகவரியில் 31.01.2024 ஆம் தேதி மாலை 5.00 மணி வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) பெறப்படும்.

இவ்வாறு செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

### மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்குச் சிறப்புக்கல்வி – சிகிச்சைக்கு ‘நலம் நாடி’ செயலி!

# அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான - இணையவழி குறைதீர் புலம்!

## பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.11-

அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான இணைய வழி குறை தீர் புலம் உள்ளிட்ட, பள்ளிக்கல்வித்துறையின் சிறப்புத் திட்டங்களை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நேற்று முன்தினம் தொடங்கிவைத்தார்.

இது தொடர்பான - பள்ளிக்கல்வித்துறையின் செய்தி வெளியீடு வருமாறு:-

மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது கல்வியினை எவ்வித தடையுமின்றி பெற வேண்டும் என்ற அக்கறையில் பல முக்கியமான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் வாயிலாக பல மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடல் பரிசோதனை நடத்தப்படுகிறது. இதன் வாயிலாக அவர்களுடைய குறைபாடுகள் கண்டறியப்பட்டு அதனைக் களைவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறாக மாணவர்களிடையே ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதனைக் கண்டறியவே “நலம் நாடி” எனும் செயலி தற்போது உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பயிற்றுனர்கள் இச்செயலியைப் பயன்படுத்தி குறைபாடுகளை எளிதில் கண்டறிவார்கள். மாணவர்களுக்கு பிறக்கும் போதே ஏற்பட்டுள்ள குறைபாடுகள், வளர்ச்சியில் ஏற்படும் தாமதங்கள், மற்றும் பிற குறைபாடுகள் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்படுகின்றன. பள்ளிகளில் ஆசிரியர்களால், இக்குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டு, பின்னர் சிறப்புப் பயிற்றுநர்களால், இந்தச் செயலியைப் பயன்படுத்தி 21 வகையான குறைபாடுகளுக்கு முழுமையான பரிசோதனை மேற்கொள்ள இயலும்.

இதன் வாயிலாக மாற்றுத்திறன் மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய கல்வி மற்றும் பிற சலுகைகள் அனைத்தும் உரிய தருணத்தில் கிடைப்பதை உறுதி செய்ய இயலும்.

“சிந்தனையில் மாற்றம்!

சமூகத்தில் ஏற்றம்!” என்பதே நம் இலக்கு.

வகுப்பறையில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளித்தல் மிகவும் அவசியம். இதனை உறுதி செய்ய “நலம் நாடி” என்ற இச்செயலி பேருதவியாக அமைந்திடும்.

**கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV)**

கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா எனும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக அரியலூர், தர்மபுரி, கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், சிவகங்கை, சேலம், பெரம்பலூர், திருப்பூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் பெண் கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் 61 KGBV உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் முறையான பள்ளிகளிலிருந்து இடைநின்ற அல்லது பள்ளியில் சேராத 10 வயது முடிந்த 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகிறார்கள்.

மேலும், 14 மாவட்டங்களில் (அரியலூர், தர்மபுரி, கடலூர், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், சிவகங்கை, சேலம், பெரம்பலூர், திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம்) கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் 44 பெண்கள் விடுதிகள் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், இடைநிலைப் பள்ளியில் (IXXII) பெண் குழந்தையைத் தக்க வைத்துக் கொள்வதாகும்.

இவ்விடுதிகளில் 9 - 12 வகுப்பு மாணவிகள் தங்கி, விடுதி வளாகம் / விடுதிக்கு அருகாமையில் உள்ள அரசு உயல்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வருகின்றனர்.

**நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவிஷ்ய வித்யாலயா (NSCBAV) உண்டு உறைவிடப் பள்ளி**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011ன்படி (RTE Rules,2011) பள்ளி வசதி ஏற்படுத்திட இயலாத குடியிருப்புகளில் பள்ளி வசதி அளிக்கும் பொருட்டு, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகள் உள்ள பள்ளி வசதி இல்லாத குடியிருப்புப் பகுதியில் உள்ள குழந்தைகள், நகர்ப்புறக் குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள், வீடில்லாக் குழந்தைகள் மற்றும் பெரியோர் துணை இல்லாத குழந்தைகளுக்காக தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், நீலகிரி, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், இராமநாதபுரம், மயிலாடுதுறை, திருநெல்வேலி, பெரம்பலூர், தர்மபுரி மற்றும் திருப்பூர்) 15 உண்டு உறைவிடப் பள்ளிகளும் 3 மாவட்டங்களில் (கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் விருதுநகர்) 3 விடுதிகளும் தற்போது இயங்கி வருகின்றன.

கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் பெண்கள் விடுதிகள், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவிஷ்ய வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றில் பயின்று வரும் மொத்தம் 9870 மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை ஒரு மாதத்திற்கு ரூ.200/ வழங்கப்பட்டு வருகிறது.

இதுநாள் வரையில் ஊக்கத்தொகைக்கான நிதி மாநிலத் திட்ட இயக்ககத்திலிருந்து மாவட்டத்திற்கும், மாவட்டத்திலிருந்து வட்டார வள மையத்திற்கும், வட்டார வளமையத்திலிருந்து பள்ளிகளுக்கு விடுவிக்கப்பட்டு மாணவர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டது.

காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு தற்போது ஜனவரி2024 முதல் மாணவ / மாணவிகளின் ஊக்கத் தொகை மாநில திட்ட இயக்ககத்திலிருந்து மாணவரின் வங்கி கணக்கிற்கு (DBT) நேரடியாக செலுத்தப்படும். இவ்வகையில் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது உத்தரவின்பேரில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 9870 மாணவ மாணவியர்களுக்கான ஊக்கத் தொகை மாணவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்துவதற்கான வசதி தொடங்கி வைக்கப்படுகிறது.

**அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கான குறைதீர் அமைப்பு!**

தமிழ்நாட்டில் உள்ள அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களின் தகுதிகாண் பருவம் முடித்தல், உயர் கல்வி பயில அனுமதி கோருதல், தேர்வு நிலை / சிறப்பு நிலை அனுமதிக்க கோருதல் போன்ற கருத்துருக்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தால் சமர்ப்பிக்கப்படும் பணியிடம் நிரப்ப முன் அனுமதி கோருதல், பணி நியமனத்திற்கு ஒப்புதல் கோருதல் போன்ற கருத்துருக்கள் வட்டார / மாவட்ட / முதன்மைக் கல்வி அலுவலகங்களில் நிலுவையில் உள்ள நிலையில், தங்கள் கோரிக்கை சார்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை பள்ளி நிர்வாகம் அறிந்து கொள்வதற்கும், பல்வேறு அலுவலகங்களில் நிலுவையில் உள்ள மனுக்களை உயர் அலுவலர்கள் கண்காணித்திடவும், விரைந்து தீர்வு காணும் வகையில் emis.tnschools.gov.in இணையதளத்தில் தங்களது கோரிக்கையினை இணைய வழியே சமர்ப்பித்திட அரசுப்பள்ளி ஆசிரியர்கள் குறைகளை தீர்வு காண ஏற்படுத்தப்பட்டுள்ள வசதியினைப் போன்று அரசு உதவி பெறும் பள்ளி நிர்வாகங்களின் குறைகளை களைந்திட ஏதுவாக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளின் தலைமையாசிரிகள் தங்களது பள்ளிக்குரிய பயனர் குறியீடு (user ID) மற்றும் கடவுச் சொல் (Password) பயன்படுத்தி EMIS இணையதளத்தில் உள்நுழைந்து தங்களது குறிப்பிட்ட கோரிக்கையினை தெரிவு செய்து, கருத்துரு சமர்ப்பிக்கப்பட்ட அலுவலகம், நாள் உள்ளிட்ட விவரங்களை சமர்ப்பிக்கும் நிலையில், சார்ந்த அலுவலரால் தொடர்புடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு விரைந்து ஆணைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அதன் விவரங்கள் இணைய வழியே மீளவும் பள்ளி நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படும்.

இதன் மூலம் அரசு நிதி உதவி பெறும் 8,337 பள்ளிகளின் கோரிக்கைகள் / குறைதீர் மனுக்களின் மீது இணை வழி தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த குறைதீர் அமைப்பு நேற்று முதல் செயல்பாட்டிற்கு வந்தது.

இத்திட்டங்கள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியால், 09.01.2024 தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கப்பட்டன.

இதன் மூலம் பள்ளிக் கல்வித்துறை, பல நவீன முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி. மா. ஆர்த்தி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழக இளைஞரணி

# நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் சுப்பிரமணி தலைமை

தர்மபுரி, ஜன.11-

தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தர்மபுரியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கட்சியின் கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் வருகிற 21ம் தேதி நடைபெற இருக்கும். இளைஞரணி மாநில மாநாடு பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது, மேலும் மாநாட்டிற்கு தர்மபுரி கிழக்கு மாவட்டத்தில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் சீருடையுடன் பங்கேற்பது, வருகிற பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தமிழக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்து கூறி ஆதரவு திரட்டுவது, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.1000 ரொக்கப் பணம் வழங்கப்படும் என்று அறிவித்த தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கழக இளைஞரணி மாநில துணை செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான சீனிவாசன், மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி, கிழக்கு மாவட்ட கழக இளைஞரணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர்.அசோக்குமார் கோவிந்தன், கலைச்செல்வன், முத்தமிழ், ராஜகோபால், கார்த்திக் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில்

# தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சமத்துவப் பொங்கல் விழா!

## கழகத்தோழர்கள் திரளாக பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஜன.11-

தஞ்சை தெற்கு மாவட்டக் கழக தி.மு.க. சார்பில் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சமத்துவ பொங்கல் விழாவில் கழகத் தோழர்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: வருகின்ற 13.01.2024 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் பட்டுக்கோட்டை, மாவட்டக் கழக அலுவல வளாகத்தில் தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் சமத்துவ பொங்கல் விழா எனது (கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அ.செல்வநாயகி வரவேற்புரையாற்றுகிறார். என். அசோக்குமார் எம்.எல்.ஏ, மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் ஏனாதி ப.பால சுப்ரமணியன், மாநில வர்த்தகர் அணி துணைத்தலைவர் பழஞ்சூர் கே.செல்வம், மாநில மீனவர் அணி துணைச்செயலாளர் வி.ஜெய பிரகாஷ், மாநில சுற்றுச் சூழல் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன் வேலுச்சாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் சுப.சேகர், ஆர்.பி.இரமேஷ், பொன்.சத்தியமூர்த்தி, ஞா.மைக்கோலம்மாள், எஸ்.ஹெச்.அஸ்ஸாம், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.தனபால், அ.அப்துல் மஜ்ஜீத், அ.மு.ரூசுவெல்ட், கௌ.கௌசல்யா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கலந்து கொள்ள உள்ளனர். கூட்ட நிறைவில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அசோக்ராணி காமராஜ் நன்றியுரையாற்ற உள்ளார்.

அதுசமயம் தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### கன்னிமாரா பொது நூலகத்தில்

# பழைய உபயோகமற்ற பொருள்கள் ஏல விற்பனை!

## ஜன.12 அன்று நடைபெறுகிறது!

சென்னை, ஜன.11-


கன்னிமாரா பொது நூலகத்திலுள்ள பழைய உபயோகமற்ற பயன்படுத்த இயலாத மரத்தளவாடங்கள், மின்பொருட்கள் மற்றும் இதரபொருட்களை இருப்பு நீக்கம் செய்ய அப்பொருட்களை உள்ளது உள்ளபடி 12.01.2024 அன்று காலை 10.00 மணி அளவில் ஏல விற்பனை மேற்கொள்ளப்பட உள்ளது.

இதன் முழு விவரத்தினை கன்னிமாரா பொது நூலகம், எழும்பூர், சென்னை - 8 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தொலைபேசி எண். 044 - 28193751-ல் தொடர்பு கொண்டோ தெரிந்து கொள்ளலாம் என, இது தொடர்பான செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேலம் மேற்கு மாவட்ட

# தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (11.01.2024 - வியாழக்கிழமை) மதியம் 3.00 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம், “கலைஞர் மாளிகை”, “வீரபாண்டியார் அரங்கில்”, மாவட்டக் கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1) 20.01.2024 சனிக்கிழமை அன்று கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் வருகை குறித்து.

2) 21.01.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு குறித்து ஆலோசனை.

3) தமிழர் திருநாள் தை திங்கள் தமிழ்ப் புத்தாண்டு குறித்து.

4) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி**
மாவட்டக் கழகச் செயலாளர்,
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.

## நம்மை உருவாக்கும்

# அரசுப் பள்ளிகளுக்கு நிதி அளித்து நன்றி செலுத்துவோம்!

## பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ‘விழுதுகள்’ தொடக்க விழா நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜன.11-**

**“நம்மை உருவாக்கும் அரசுப் பள்ளிக் கூடங்களுக்கு நிதி உதவி அளித்து, நன்றி செலுத்துவோம்!” என்று ‘விழுதுகள்’ தொடக்க விழா நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைக்கின்ற விதமாக பள்ளிக் கல்வித்துறை ‘விழுதுகள்’ என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. இதன் தொடக்க விழா சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:

“இந்த விழுதுகள் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன், பெருமை அடைகின்றேன்.

**பள்ளிகளைக் காப்பாற்ற ‘விழுதுகள்’ எனும் சிறந்த முயற்சி!**

பள்ளிகள்தான் நம்மை உருவாக்குகின்றன. நம்மை உருவாக்கிய பள்ளிகளைக் காப்பாற்ற வேண்டும். அவற்றுக்கு உதவ வேண்டுமென்று பள்ளிக் கல்வித்துறை ‘விழுதுகள்’ என்ற சிறந்த முயற்சியை இன்று துவங்கி இருக்கிறது.

**பள்ளிக்கல்வித்துறை அமைச்சருக்கு எனது பாராட்டுகள்!**

இந்த முன்னெடுப்புக்கு மிகச்சிறப்பாக ‘விழுதுகள்’ என்ற ஒரு சரியான பொருத்தமான பெயர் வைத்திருக்கிறீர்கள். அரசுப் பள்ளிகள் என்பது ஆலமரத்தின் விழுதுகள்தான். அரசுப் பள்ளிகளின் முன்னாள் மாணவர்கள், அந்த விழுதுகளைக் கொண்டு பலப்படுத்துகின்ற முயற்சியை மேற்கொண்டிருக்கக்கூடிய பள்ளிக் கல்வித்துறைக்கும் அமைச்சருக்கும் என்னுடைய பாராட்டுகள்.

எப்படி இந்திய ஒன்றியத்திற்கு வழிகாட்டுகின்ற வகையில், நம்முடைய மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறதோ, அதேபோல இந்திய ஒன்றியத்திற்கே ஒரு முன்னோடியான திட்டம்தான் இந்த விழுதுகள் திட்டம். சிலர், “பள்ளிகளை மேம்படுத்தும் பணியை அரசே செய்யலாமே. அதற்கு எதற்கு முன்னாள் மாணவர்கள் முன் வர வேண்டும்?” என்று கேட்கலாம்.

அரசுப் பள்ளிகளை மேம்படுத்த நம்முடைய பேராசிரியர் அவர்களின் பேரில் ‘பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில்’ கிட்டத்தட்ட 12 ஆயிரத்து 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பணிகளை நம்முடைய அரசு செய்து கொண்டுதான் வருகின்றது. எனினும் பள்ளி மேம்பாடு போன்ற விஷயங்களில் அரசு மட்டுமல்ல, சமூகத்தினுடைய பங்களிப்பும் மிக மிக அவசியம் என்கிற அடிப்படையில்தான் இன்று விழுதுகள் என்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கின்றோம்.

**நமது வாழ்வில் பள்ளிக் காலமே பசுமையான காலம்!**

இன்னும் சொல்லப்போனால், பல ஊர்களில் மாணவர்கள் தாங்களாகவே முன் வந்து அவர்கள் படித்த பள்ளிகளை மேம்படுத்துகிறார்கள். அதை மேலும் மேம்படுத்துவதற்காகத்தான் இந்தத் திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது.

வாழ்க்கையில் நாம் அனைவரும் எத்தனையோ கட்டங்களைப் பார்த்திருப்போம். எத்தனையோ பாதைகளைக் கடந்து வந்திருப்போம். ஆனால் நம்முடைய பள்ளிக் காலம் என்பதுதான் மனதில் எப்பொழுதும் பசுமையாக இருக்கக் கூடிய காலம்.



நேற்று முன்தினம் (09.01.2024) சென்னை வர்த்தக மையத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற முன்னாள் அரசு பள்ளி மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பான “விழுதுகள்” தொடக்க விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னாள் மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திருமதி மா.ஆர்த்தி, தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் சுதன், (விருப்ப ஓய்வு), பொது நூலக இயக்குநர் க. இளம்பகவத், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நம்முடைய முதல் சாதனை, முதல் தவறு, முதல் பாராட்டு, முதல் திட்டு, முதல் நட்பு இவை எல்லாவற்றையுமே பள்ளிக் கூடத்தில்தான் நாம் கடந்து வந்திருப்போம். பள்ளிக்கூடங்களில் உருவாகின்ற நட்பு நம்முடைய எல்லாக் காலத்திற்கும் நிலைத்திருக்கும். அதற்கு ஒரு சிறந்த உதாரணம், இங்கே எனக்கும் நம்முடைய அமைச்சர் அவர்களுக்குமான அந்த நட்புதான். நாங்கள் இருவரும் ஒரே பள்ளியில் படிக்கவில்லை. இருந்தாலும் பள்ளிக்கூடம் படிக்கும் போது ஆரம்பித்த நட்பு இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த மகிழ்ச்சியான நெகிழ்ச்சியான நிகழ்வுக்கு எல்லாம் எது காரணம் என்று பார்த்தோமானால், அது நாம் படித்த பள்ளிகள்தான்.

**முத்தமிழறிஞர் கலைஞர் - முதல்வர் ஆகியோரின் பள்ளி அனுபவங்கள்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் படித்த பள்ளிகள் மீது மிகப்பெரிய பாசம் வைத்திருந்தார். திருக்குவளை வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய தொடக்கப் பள்ளியை கலைஞர் அவர்கள்தான் தரம் உயர்த்திக் கொடுத்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தான் படித்த சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளிக்கு அடிக்கடி சென்று அவருடன் படித்த மாணவர்களை அடிக்கடி சந்தித்து உரையாடுவதை ஒரு வழக்கமாகவே கொண்டு இருக்கின்றார்.

அந்தப் பள்ளிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்னாள் மாணவர்களுடன் சேர்ந்து கூடைப் பந்து மைதானம், நீர் மேலாண்மைத் திட்டம், கழிவறை வசதிகள், சோலார் திட்டம் ஆகியவற்றை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு நான் படித்த எழும்பூர் பகுதியில் இருக்கக்கூடிய டான் பாஸ்கோ பள்ளிக்கூடம் பக்கம் போனாலே, என்னுடைய பள்ளி நினைவுகள் எனக்கு வந்துவிடும்.

அரசுப் பள்ளிகளில் படித்த முன்னாள் மாணவர்கள் இணைந்து, அவரவர் பள்ளிக்கு உதவ வேண்டும் என்று நம்முடைய அரசு சார்பில், ஒரே ஒரு அழைப்புதான் விடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு உலகம் முழுவதுமிருந்தும் 7 இலட்சம் முன்னாள் மாணவர்கள் அவர்கள் படித்த அரசுப் பள்ளிகளை மேம்படுத்த, முன்வந்து இருக்கிறீர்கள் என்றால், உங்கள் அத்தனைப்பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னும் தொடர்ந்து நிறைய பேர் இணைய வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

**‘முன்னாள் மாணவர் மன்றங்கள்’ ஒரு சிறப்பான முன்னெடுப்பு!**

உண்மையாகவே, இது ஒரு புதிய மிகப்பெரிய நம்பிக்கையைத் தருகிறது. ஏனென்றால், ‘அலுமினி அசோஷியேஷன்’ என்பதெல்லாம் முன்பு தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில்தான் இருக்கும். இப்போது அரசுப் பள்ளிகளிலும் முன்னாள் மாணவர் மன்றங்களை உருவாக்குவது, மிகவும் சிறப்பான ஒரு முன்னெடுப்பு.

தொழில்நுட்பம் வளர்ந்துள்ள காலம் இது. வாட்ஸ் அப் குரூப், பேஸ்புக் குரூப் என்று முன்னாள் மாணவர்கள் இணைவதற்கான வாய்ப்புகள் இப்பொழுது அதிகம் இருக்கின்றன. அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள் மாணவியர்கள் இன்றைக்கு உலக அளவில் பல முன்னணி நிறுவனங்களில் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

**அரசுப் பள்ளிகளில் படித்து உலக சாதனை புரிந்தோம்!**

இன்னும் சொல்லப்போனால், பல முன்னணி நிறுவனங்களை நடத்திக் கொண்டும்வருகிறார்கள். இஸ்ரோவிஞ்ஞானிகள் மயில்சாமி அண்ணாதுரை, வீர முத்துவேல், நிகார் சாஜி எனப் பலர் அரசுப் பள்ளியில் படித்தவர்கள்தான். இன்று உலக சாதனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் சந்திராயன் விண்கலத்தை நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக நிறுத்தியதைப் பாராட்டி, சந்திராயன் திட்டங்களில் பணியாற்றிய தமிழ்நாட்டு விஞ்ஞானிகள் மயில்சாமி அண்ணாதுரை, மு.வனிதா, நிகார்சாஜி, வீரமுத்துவேல் உள்ளிட்ட பலருக்கு நம்முடைய அரசு சார்பில் தலா 25 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்தார்கள்.

இதில் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்றால், விஞ்ஞானி வீரமுத்துவேல் அவர்கள் அந்த 25 லட்சம் ரூபாயை, தான் படித்த கல்வி நிறுவனங்களுக்கே கொடுத்து விட்டார். நம்முடைய இரண்டாவது பெற்றோர், இரண்டாவது வீடு என்று கூடச் சொல்லலாம். அப்படிப்பட்ட இடம் எது என்று பார்த்தால், அது நாம் படித்த பள்ளிக்கூடம்தான்.

சின்ன வயதில் பெற்றோர்கள் நமக்கு எப்படி எல்லாம் கொடுத்து ஆளாக்குகிறார்களோ, அதே மாதிரி பள்ளி நாள்களின் போது கல்வி, அறிவு எல்லாவற்றையும் கொடுத்து நம்மை ஆளாக்கியதும் நாம் படித்த பள்ளிக்கூடங்கள்தான்.

வெவ்வேறு இடங்களில் இன்று முன்னாள் மாணவர்கள் இணைந்து, பள்ளிக்கு `ஸ்மார்ட் வகுப்பறை’ ஏற்படுத்தித் தந்தார்கள் என்று நிறைய செய்திகளை, இப்போது பார்க்கிறோம். அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்றைக்கு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக் கூடிய மாணவர்களுக்கு அரசு, ‘காலை உணவுத் திட்டத்தை’ அளித்துக் கொண்டிருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல், சட்டம் என உயர் கல்வி படிக்கத் தனி இட ஒதுக்கீடு முறை அமலில் இருக்கிறது.

**இங்கே இந்தப் பள்ளி மாணவர்கள் இரண்டு சிறப்பான பாடல்களைப் பாடிக் காண்பித்தார்கள். அதில் ‘சமூக நீதி’ என்ற தலைப்பில் ஒரு பாடலை மாணவச் செல்வங்கள் பாடிக் காட்டினார்கள். காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் அசெம்பிளி நடத்தி முடித்துவிட்டு பிரேயர் எல்லாம் பண்ணுவீர்கள். அந்த நேரத்தில் நீங்கள் வகுப்பிற்குப் போவதற்கு முன், இந்தச் சமூக நீதிப் பாடல்களையும் பாடிவிட்டு வகுப்புக்குச் செல்லுங்கள்.**

**ஐ.ஐ.டி. போன்ற உயர் கல்விக்கு நமது அரசு தரும் பயிற்சி!**

அரசுப் பள்ளியில் படித்துவிட்டு, மேல்படிப்புக்கு கல்லூரிக்குச் செல்கின்ற மாணவிகளுக்குப் ‘புதுமைப்பெண்’ என்ற திட்டத்தின் மூலம் ஊக்கத் தொகையாக, உதவித்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

அரசுப் பள்ளி மாணவர்கள் ஐ.ஐ.டி. போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேர அரசே இப்போது பயிற்சி கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எல்லாம், இப்போது கையெழுத்து ஆகியிருக்கிறது.

‘நான் முதல்வன்’ மாதிரியான உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் எல்லா அரசுப் பள்ளிகளிலும் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ மாணவிகளுக்கு நம்முடைய கழக அரசு ஏராளமான திட்டங்களைச் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறது.

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு எனது பாராட்டுகள்!**

பள்ளிகள் எப்படி நம்மைக் கைவிட்டு விடவில்லையோ அதேபோலப் பள்ளிகளையும் நாம் கைவிட்டு விடக்கூடாது. அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அவர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று மூன்றாண்டு காலம் ஆகப்போகிறது. அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது கூட இவ்வளவு நாள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று இருக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். ஞாயிற்றுக்கிழமைகூட ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்தில் ஏதாவது ஒரு ஆய்வில் இருக்கிறார். அந்த அளவுக்குச் சிறப்பாக இந்தப் பணியைச் செய்துகொண்டு வருகிறார்.

இந்த நிகழ்ச்சிக்கு என்னை அழைக்கும்போது என்ன நிகழ்ச்சி என்று கேட்டேன். ‘முன்னாள் மாணவர்கள் அலுமினி அசோசியேசன் அரசுப் பள்ளியில் ஆரம்பிக்கிறோம், வாருங்கள்’ என்றார். நான் இந்த அரங்கத்திற்குள் வரும்போது உண்மையாகவே இவ்வளவு பெரிய கூட்டத்தை எதிர்பார்க்கவே இல்லை.

இருநூறு முன்னூறு பேர் இருப்பார்கள் என்றுதான் நினைத்தேன். ஆனால், உள்ளே வந்து பார்த்ததற்குப் பிறகுதான் இந்த அரங்கமே நிரம்பி வழிகின்ற அளவிற்கு இவ்வளவு பேர் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால், இந்த நிகழ்ச்சியே உங்களுக்கான ஒரு வெற்றிதான். எனவே, இந்தத் துறையை நான் பாராட்டுகின்றேன்.

**‘விழுதுகள்’ மூலம் நமது பள்ளிகளை வலிமையாக்குவோம்!**

உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த மிகப்பெரிய நிகழ்வின் வாயிலாக உலகெங்கும் வாழுகின்ற தமிழ்நாட்டு அரசுப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் ஓரணியில் இணைந்து வாருங்கள். விழுதுகள் மூலம் நம்முடைய பள்ளிகளை வலிமையாக்குவோம் என்று கேட்டுக் கொண்டு துறைக்கு இன்னொரு ஒரு சின்ன கோரிக்கை; இங்கே பள்ளி மாணவர்கள் பாடல்கள் மற்றும் இலச்சினையை வெளியிட்டோம்.

**சமூக நீதிப் பாடல் பாடிவிட்டு வகுப்பறைக்குச் செல்லுங்கள்!**

இங்கே இந்தப் பள்ளி மாணவர்கள் இரண்டு சிறப்பான பாடல்களைப் பாடிக் காண்பித்தார்கள். அதில் `சமூக நீதி’ என்ற தலைப்பில் ஒரு பாடலை மாணவச் செல்வங்கள் பாடிக் காட்டினார்கள்.

காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் அசெம்பிளி நடத்தி முடித்துவிட்டு பிரேயர் எல்லாம் பண்ணுவீர்கள். அந்த நேரத்தில் நீங்கள் வகுப்பிற்குப் போவதற்கு முன், இந்தச் சமூக நீதிப் பாடல்களையும் பாடிவிட்டு வகுப்புக்குச் செல்லுங்கள். அதற்கு பள்ளிக் கல்வித்துறை வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சிஎன்றுகூறிவிடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விழாவுக்கு தலைமை தாங்கிப் பேசினார். துறையின் அரசுச் செயலாளர் குமரகுருபரன், நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், மாநில திட்ட இயக்குநர் ஆர்த்தி, நூலகத்துறை இயக்குநர் இளம்பகவத், தொடக்கப்பள்ளி இயக்குநர் கண்ணப்பன், கல்வியாளர்கள் வசந்தி தேவி, மாடசாமி, கிருஷ்ணமூர்த்தி, ஜாக்டோ ஜியோ அமைப்பைச் சேர்ந்த தியாகராஜன், பள்ளிக் கல்வித் துறையின் அரசு அலுவலர்கள், அரசுப் பள்ளிகளின் முன்னாள் மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள், நிர்வாகிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

## வெள்ளத்தின்போது தேவையான நேரத்தில் கொடுத்தால்தான் அது உதவி - கருணை!

# ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் நடக்கிறது!

## “அமைச்சர்கள் - ஒன்றியக் குழுவினர் பாதிப்படைந்த பகுதிகளைப் பார்த்து என்ன பலன்?” - ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி விவாதத்தில் பத்திரிகையாளர் க.குபேந்திரன் கேள்வி!

சென்னை, ஜன.11 -

**வெள்ளத்தின் போது தேவையான நேரத்தில் உதவி செய்வதுதான் கருணை ஆகும். கருணை இல்லாமல் ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் நடக்கிறது என்று மூத்தப் பத்திரிகையாளர் க.குபேந்திரன் ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சி விவாதத்தின்போது குறிப்பிட்டார்...**

**‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியில் ச.திலகவதியை நெறியாளராகக் கொண்டு, “எம்.பி.க்களுக்கு நேரம் ஒதுக்காத அமித்ஷா... வெள்ள நிவாரணப் பங்கீட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறதா?” என்ற தலைப்பில் நடைபெற்ற ‘நேர்படப் பேசு’ நிகழ்ச்சியில் மூத்த பத்திரிகையாளர் க.குபேந்திரனின் ஆணித்தரமான விவாதம் வருமாறு:**


ச.திலகவதி


க.குபேந்திரன்

தமிழ்நாடு அரசு கேட்ட தொகை 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய். இதில் இடைக்கால நிவாரணமாக அவசரமாக 2000 கோடி ரூபாய் கேட்டது. சென்னை உள்பட அதனைச் சுற்றியுள்ள நான்கு மாவட்டங்கள் பாதிப்பு. இதனை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் பார்த்தார். தென் மாவட்டங்கள் பாதிப்புகளை நிர்மலா சீத்தாராமன் அமைச்சர் பார்வையிடுகிறார். இவற்றை எல்லாம் எதற்காக இவர்கள் வந்து பார்வையிட வேண்டும்? அதற்குப் பிறகு ஒன்றியக் குழு எதற்காகப் பார்வையிடவேண்டும்.? இது என்ன சம்பிரதாயமா? எதற்காக இவர்கள் எல்லாம் வந்து பார்வையிட வேண்டும்.?

**நெறியாளர் ச.திலகவதி:** ஒரு பிரச்சினை என்றால் நேரடியாக வந்து பார்க்க வேண்டும். இல்லையென்றால் நேரில் கூட வரவில்லை என்று சொல்வீர்களே?.

**க.குபேந்திரன்:** தமிழ்நாடு முழுவதும் மணல் குவாரி 2001 இல் எப்படி இருந்தது? 2021 இல் எப்படி இருந்தது? ட்ரோன் வைத்து அளந்து, ஐ.ஐ.டி.யை வைத்து அளந்து பார்த்து கணக்கீடு செய்தார்கள். அப்போது டெல்லியில் உட்கார்ந்து கொண்டு ட்ரோனை அனுப்பி நெல்லை, தூத்துக்குடியில் எவ்வளவு பாதிப்பு என்று பார்த்துவிட்டு அவர்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கலாமே, எதற்காக இந்த சம்பிரதாயம்? அவர்கள் எல்லாம் வந்த வேலை என்ன? ஏற்கனவே கொடுத்த தொகை கொடுப்பதற்காக வந்தார்களா என்றால் கிடையாது.

ஒரு அவசரத் தேவை என்றால் – போன நவம்பர் மாதம் கூட பத்தாயிரம் கோடி ரூபாய் ஜி.எஸ்.டி. வருவாய் கொடுத்து இருக்கிறது. தமிழ்நாடு அரசு. அப்போது 2000 கோடி ரூபாய் என்பது மத்திய அரசுக்கு ஒரு தொகையே கிடையாது.

ஆனால் அவர்களுக்கு என்ன பிரதானமாக இருக்கிறது. தென் மாவட்டங்களுக்கு பார்வையிட வந்த அந்த அமைச்சர் சொல்கிறார், மாநில அமைச்சர் (அனிதா இராதாகிருஷ்ணன்) ஏரல் என்ற பகுதியில் அங்கே இருக்கின்ற மேம்பாலம் உடைந்து நான்கு சாலைகளும் பழுதாகி அவர் மூன்று நாட்கள் கழித்துத்தான் மீட்கப்பட்டுள்ளார்.

பாலம் உடைகிறது- சாலை உடைகிறது. போர்க்கால அடிப்படையில், இவையெல்லாம் சீர் செய்ய வேண்டும், அதற்குப் பணம் தேவை, அவர்கள் என்ன சொல்கிறார்கள், பெருமாள் வருவதற்கு சாலை வேண்டும். சுற்றுச் சுவர் தூய்மையாக இருக்க வேண்டும் என்கிறார்கள். மக்கள் நடப்பதற்கு சாலை இல்லை, போவதற்கு பாலம் இல்லை. அதனை கட்டுவதற்கு முக்கியத்துவம் தர ஒன்றிய அரசால் முடியவில்லை. ஆனால் பெருமாள், அந்த சுற்றுச்சுவரை சுற்றி வர வேண்டும், எத்தனை பெரிய சிந்தனை. எத்தனை பெரிய ஆர்வம். பிறகு எப்படி மக்கள் சும்மா இருப்பார்கள்.

**நெறியாளர்:** அந்தக் கோரிக்கையும் அங்கே இருக்கின்ற பொதுமக்கள் வைத்தது தானே?

**க.குபேந்திரன்:** அது முக்கியம், நான் மறுக்கவில்லை. பெருமாள் சுற்றி வருகின்ற சுவர் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும்? தூத்துக்குடியில் பத்து நாட்களாகியும் தண்ணீர் வடியவில்லை, சாலை சரியில்லை. எல்லா இடங்களிலும் பத்து அடி, பதினைந்து அடி தண்ணீர் தேங்கியிருக்கு. அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகள், இப்போது இருக்கின்ற சிப்காட் எல்லாம் சென்று பாருங்கள், எல்லா இடங்களிலும் தண்ணீர்.

கார்மெண்ட் வைத்து இருக்கின்ற இடங்களிலும், மிஷ்னரி வைத்து இருக்கின்ற இடங்களிலும் தண்ணீர், எத்தனை தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கு. உடனடியாக கேட்ட தொகை 2000 கோடி ரூபாய், இதனை தருவதற்கு மனமில்லை. அவர்கள் எல்லாம் பார்வையிட வந்ததே வீண், ஒன்றியக் குழு வந்தது, இரண்டு அமைச்சர்கள் வந்தது எல்லாமே வீண். குஜராத் கேட்டதும் ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தார்கள். அந்த பிராசஸிங் மூன்று கட்டமாக நடந்ததாக சொன்னார்கள். ஆனால் ஐந்து நாட்களில் குஜராத்திற்கு கொடுக்க முடிந்தது என்றால் அப்போது ஏன் தமிழ்நாட்டிற்கு அதனை அவர்களால் செய்ய முடியவில்லை.

**நெறியாளர்:** மாநில அரசு உடனடியாக அவர்களின் நிதியை பயன்படுத்தி இருக்கு. ஒரு அளவுக்கு மீட்புப்பணிகளை எல்லாம் சரியாக செய்து இருக்கிறார்கள். அடுத்தடுத்து நிவாரணத் தொகையை கொடுக்கலாம் என்று அவர்களின் கணக்கு ஒன்று இருக்குமே?

**க. குபேந்திரன்:** ஒரு ஊழல் விவகாரத்தில் கணக்கெடுப்பை நடத்துவதற்கு ட்ரோனை பயன்படுத்திக்கொண்டு உட்கார்ந்து இருப்பது வேறு. அப்படி இல்லை என்றால் மற்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது என்பது வேறு. மெட்ரோ ரயில் திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஒதுக்குவது வேறு. ஆனால் வாழ்வாதாரம் இழந்து போராடிக் கொண்டு இருக்கின்ற ஐ.சி.யூ.வில் இருப்பவர்களுக்கு எப்படி உதவ வேண்டும்?

ஐ.சி.யூ.வில் இருப்பவர்களுக்கு எப்படி உதவ வேண்டுமோ, அப்படி உதவ வேண்டும். அவர்கள் வெட்ட வெளியில் உட்கார்ந்து கொண்டு, தண்ணீர் பாட்டில் போட்டாச்சு, சாப்பாடு போட்டாச்சு என்றால், ஐ.சி.யூ.வில் இருப்பவர்களுக்கு என்ன போட்டாங்க...? இரண்டு பேரும் பக்கத்து பக்கத்து வீட்டில் இருக்கிறோம். நீங்கள் (நெறி யாளர் திலகவதி) மாடி வீட்டில் இருக்கிறீங்க, உதாரணத்துக்கு சொல்கிறேன் தவறாக எடுத்து கொள்ள வேண்டாம்.

நான் உங்கள் வீட்டு பக்கத்தில். குடிசையில் இருக்கிறேன். ஆனால் என் வீடு முழுவதும் அடித்துச் செல்லப்பட்டு விட்டது. வாழ்வாதாரம் இழந்து விட்டேன். எனக்கு அந்தத் தொகுதியில் உள்ள எம்.எல்.ஏ., அந்த மாநில அரசு முடிவெடுக்க வேண்டுமா? இல்லே நீங்கள், திலகவதி பக்கத்தில் ஏன் குடிசையில் இருக்கிறீர்கள். நீங்களும் மாடி வீடு கட்டி விட்டு மேலே நீங்கள் இருந்திருக்கலாமே? என்று சொல்வது மாதிரி தான் இருக்கிறது.

மாநில அரசு கேட்டது என்ன? 2000 கோடி ரூபாய் இடைக்கால நிவாரணம். அந்த இரண்டாயிரம் கோடி தருவதற்கு அவர்களுக்கு மனம் இல்லை அவர்கள் யாரும் இங்கே வந்தே இருக்கக் கூடாது. அவர்கள் எதற்காக வந்து பார்வையிடுகிறார்கள். அவர்கள் பார்வையிடுவதின் நோக்கம் என்ன?

நிர்மலா சீதாராமன் அமைச்சராக இருந்து இது வரை எத்தனை முறை தமிழ்நாட்டிற்கு வந்து பாதிக்கப்பட்ட இடங்களை பார்த்து இருக்கிறார். பாதிப்பான இடங்களை எத்தனை முறை பார்த்துட்டு போய் இருக்கிறார். பாதிப்பான இடங்கள் என்று தெரிந்து அவர்கள் பார்த்து என்ன முடிவெடுத்துஇருக்கிறார்? அவர், வேறு யாருமில்லை தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

தமிழ்நாட்டில் 2015 முதல் 2021 வரை கேட்கப்பட்ட பேரிடர் நிவாரணத் தொகை ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய், இத்தனை ஆண்டுகளில் ஒன்றிய அரசு கொடுத்ததோ 5 ஆயிரத்து முன்னூறு கோடி ரூபாய் கிட்டத்தட்ட 4.6 சதவிகிதம் தான் கொடுத்து இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு இருக்கிறது என்று குற்றம் சாட்டுவதில் தவறே இல்லை.

தங்கம் தென்னரசு அருமையான விளக்கம் கொடுத்தார். நாம் எவ்வளவு நிதி கொடுக்கின்றோம், ஒன்றிய அரசு எவ்வளவு திருப்பித் தருகிறார்கள். உத்தரப்பிரதேசம் எவ்வளவு நிதி வருவாய் கொடுக்கிறது, அவர்களுக்கு எவ்வளவு தருகிறார்கள். ஆறு மடங்கு தருகிறார்கள். இதனை யெல்லாம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் பேசிய பேச்சு. பெருமாளுக்குச் சாலை, அவர்கள் கொடுக்க வேண்டிய நிதிக்கு ஆயிரம் கோடி கொடுத்தாச்சு என்று ஏற்கனவே கொடுக்க வேண்டிய 500 கோடி ரூபாய், அட்வான்சா கொடுக்கின்ற 500 கோடி ரூபாய் இதனை தவிர வேறு தொகை கொடுத்து இருக்கிறார்கள். கொடுக்க முடியவில்லை என்றால் அவர்களுக்கு தமிழ்நாட்டின் மீது ஒரு அக்கறையும் கிடையாது.

**நெறியாளர்:** தமிழ்நாடு அரசு இந்த நிலைமையை சரியாக கையாண்டிருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன் என்றால் பிரதமர் இங்கே வந்துவிட்டுப் சென்ற பிறகு அவ்வளவு கோஷம் போட்டாங்க, ‘மோடி ... மோடி, ஜெய் ஸ்ரீராம்’ என்று. இவ்வளவு பெரிய அழுத்தத்திற்கு இடையில் முதலமைச்சர் உட்கார்ந்து இருக்கிறார், அடுத்த இரண்டு நாட்களிலேயே உதயநிதி செல்கிறார், அதுவும் கேலோ இந்தியா அந்த பங்ஷனுக்காக பிரதமரிடம் நேரடியாக அழைப்பு விடுக்கிறார். அதில் ஒரு இணக்கமான சூழல், இது அழுத்தமா, இணக்கமா, என்ன சூழ்நிலையில் தி.மு.க.பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.?

**க.குபேந்திரன்:** கேலோ இந்தியா ஒரு அனைத்து மாநிலங்கள் பங்கேற்கின்ற விளையாட்டுப்போட்டி, தவறு பிரதமரை, விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற முறையில் அழைப்பதில் தவறு கிடையாது. இணக்கம் எல்லாம் கிடையாது. அதே திருச்சியில் முதலமைச்சர் வைத்த கோரிக்கையைக் கூட அவர் தெளிவாக கூறினார். இது மாநில உரிமை சார்ந்து வைக்கின்ற கோரிக்கையே தவிர இது வெற்று முழக்கமல்ல என்று சொல்லிவிட்டார்.

இங்கே பேசியவர்கள் எல்லோரும் பேசும் போது தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டம் மாநிலச்சட்டம் இப்படித்தான் எல்லோரும் பேசுகிறார்கள். இதில் சட்டத்திற்கே வரக் கூடாது. இது கருணையின் அடிப்படையில் செய்கின்ற ஒரு செயல். ஒரு பாதிக்கப்பட்ட இடத்தில் அவர்களின் கருணைதான் வரணுமே தவிர சட்டப்படி என்ன செய்யணும். சட்டப் படி என்றெல்லாம் பார்க்கவே கூடாது. மிலிட்ரி ஓடி வந்தாங்க, ஹெலிகாப்டர் ஓடி வந்ததுன்னு சொல்றாங்க. இதற்கெல்லாம் பில் போட்டு வாங்கிடுவாங்கன்னு எல்லோரும் பேசிவிட்டாங்க. அப்போது கூலிக்கு வந்து உதவி செய்வதை பெருமையாக சொல்லவே கூடாது.

பெட்ரோலுக்கு காசு வாங்குவாங்க, வந்ததற்கும் காசு வாங்குவாங்க என்று சொல்கின்ற குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் என்ன அர்த்தம்? ஒன்றிய அரசு என்பது ஒரு பெரிய மனப்பான்மையோடு வர வேண்டும். ஒன்றிய அரசுக்கு சொந்த நிதி கிடையாது. எல்லா மாநிலங்களும் கொடுக்கின்ற நிதி வருவாயை வைத்துக் கொண்டு தான் ஒன்றிய அரசு தருகிறது.

**நெறியாளர்:** தொடர்ந்து ஒன்றிய அரசை வசை பாடுகிறார்கள் எங்களுக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்று காட்டமான விமர்சனங்களை முன் வைக்க முடிகின்றது. ஆனால் ஒரு விழாவிற்குப் போன அடுத்த நாள் பிரதமரை அமைச்சர் உதயநிதி அவர்கள் பார்த்து இருக்கிறார், பிரதமரிடம் சொல்லி இருக்கிறேன். பிரதமரும் சொல்லி இருக்கிறார் என்று சொல்லும் போது ஒரு முரண்பாடு வருகிறது இல்லையா? இதனை அரசியல் நாகரிகம் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமா?

**க.குபேந்திரன்:** பிரதமரை ஒரு நிகழ்ச்சிக்கு அழைப்பது என்பது வேறு, அந்த நிகழ்ச்சியில் நீங்கள் நிதி கொடுங்கள் என்று கேட்பதில் தவறே கிடையாது. உடனே தி.மு.க. சரண்டர் ஆகிவிட்டது என்று நீங்கள் கேட்ட கேள்வியில் இருந்து புரிந்து கொள்ளலாம். ஆனால் அது உண்மை இல்லை. தமிழ்நாட்டில் காங்கிரஸ்- தி.மு.க. கூட்டணிக்கு இருக்கின்ற மரியாதை என்பது, நமக்கெல்லாம் தெரியும்.

பா.ஜ.க. வளர்ந்து இருக்கிறது என்றால் நாடாளுமன்றத் தேர்தலில் தான் நாம் புரிந்து கொள்ள முடியும். நான் கேட்பது, உண்மையில் தமிழ்நாட்டில் பா.ஜ.க. வளர்ந்திருக்கிறது. பா.ஜ.க. வினர்க்கு அரசியல் ஆசை இருக்கிறது. தமிழ்நாட்டில் பா.ஜ.க. கால் ஊன்ற வேண்டும் என்றால் அட்லீஸ்ட் ஒரு இரண்டு எம்.பி. ஜெயிக்க வேண்டும். பத்து எம்.எல்.ஏ. ஜெயிக்க வேண்டும் என்றால் அவர்கள் கருணையோடு இங்கே பார்க்க வேண்டும் என்றுதான் சொல்கிறோம். மற்ற மாநிலங்களில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் நிதி கொடுப்பதின் விகிதாச்சாரத்தை அமைச்சர் தங்கம் தென்னரசு பட்டியலிட்டுள்ளார்.

உண்மையில் கேட்டத் தொகையை பிரதமர் கொடுத்து இருந்தால் வாக்களிப்பவர்களில் இரண்டு பேராவது மாற்றி வாக்கு அளிப்பார்கள்.

பிரதமர் பங்கேற்ற விழா மேடையில் முதலமைச்சர் கோரிக்கை வைத்து இருக்கிறார். உண்மையில் பிரதமர் என்ன சொல்லி இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் சட்டம் பார்க்கக் கூடாது. மக்களுக்கு என்ன தேவை அதனைத்தான் பார்க்க வேண்டும். சட்டத்திற்காக மக்கள் அல்ல, மக்களுக்காகத் தான் சட்டம். சட்டம் போட்டுட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்றால் யாராலுமே வாழ முடியாது.

**நெறியாளர்:** பரிசீலிக்கிறேன் என்று தானே சொல்லி இருக்கிறார். அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் அதனைத் தானே சொன்னார்.

**க.குபேந்திரன்:** பரிசீலிக்கிறேன் என்று சொல்வது எத்தனை நாட்களுக்கு? ஒரு தேவை என்று வரும் போது அந்த தேவைக்கான நேரத்தில் கொடுத்தால் தான் அது உதவி, இதனை மாநில அரசே சரி செய்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டால். பிரச்சினையே கிடையாதே. இரண்டு இலட்சத்து இருபத்தி மூவாயிரம் வருவாயைத் தருகின்ற உத்தரப்பிரதேசத்திற்கு 15.3 இலட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசு தருகிறது என்றால், 6 மடங்கு நிதி வருவாய் தருகிறோம் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பட்டியலிட்டார். அதனை மறுக்க முடியுமா? உடனே ஒன்று சொல்வார்கள் சென்னைக்கு ஒரு நிதி வருகிறது, கோயம்பத்தூருக்கு ஒரு நிதி வருகிறது அப்படி கிடையாது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ் மாநிலம் என்ன கொடுக்கிறதோ அந்த மாநிலத்திற்குரிய நிதியை கொடுப்பதில்லை.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன் ஆணித்தரமான தனது கருத்தினை பதிவுசெய்திருந்தார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மேல்மலையனூர் தாலுகாவில் ரேஷன் பொருட்களை கொண்டு செல்வதற்கு வாங்கிய புதிய லாரிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளனர்.


விக்கிரவாண்டி ஒன்றியக் குழு தலைவர் சங்கீதாஅரசி ரவிதுரைக்கு அரசு சார்பில் வழங்கப்பட்ட புதிய வாகனத்தின் சாவியை ஒன்றிய அலுவலகத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. வழங்கினார். ஒன்றியச் செயலாளர்கள் ஜெய.ரவிதுரை , ஜெ.ஜெயபால், பேரூராட்சி குழு தலைவர் அப்துல் சலாம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, முபாரக் அலி பேக், மேலாளர் ஜெயபால், ஒன்றிய பொறியாளர்கள் இளையராஜா, நடராஜன், முருகன், ஒன்றிய தலைவர் முரளி, கண்காணிப்பு குழு எத்திராசன், முன்னாள் கவுன்சிலர் அசோக்குமார், அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# அயோத்தி ராமர் கோயில் ஆன்மிகமல்ல; அரசியல் மட்டுமே!

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் பிரம்மாண்டமான ராமர் கோயில் ஒன்று கட்டப்பட்டு, முடிந்தும் முடியாத நிலையில் இந்த மாதம் திறந்து வைக்கப்படப் போகிறது. இந்தக் கோயில் திறப்பு விழாவில் பங்கேற்க பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி 22ஆம் தேதி நாலரை அடி உயரமுள்ள குழந்தை ராமர் சிலை “பிராண பிரதிஷ்டை” செய்து நிறுவப்படப் போகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்ய நாத், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ஆகியோர் பங்கேற்பார்கள் என்று உறுதியாகத் தெரிகிறது. தெய்வச் சிலையை நிறுவுவதிலோ, கோயில் குடமுழுக்கு போன்ற மதம் சார்ந்த சடங்குகளிலோ முக்கியமான இந்து மத துறவிகளோ, ஆச்சாரியார்களோ முன்னிறுத்தப்படுவதாகத் தெரியவில்லை. அதாவது எந்த ஒரு குறிப்பிட்ட இந்து மதப்பிரிவின் சம்பிரதாயங்களின்படி இந்தக் கோயில் கும்பாபிஷேக சடங்குகள் நடக்கின்றன என்பது தெளிவாக இல்லை.

பாபர் மசூதி 1992ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட பின் அந்த இடம் யாருக்கு சொந்தம் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அதிசயமான ஒரு தீர்ப்பை வழங்கியது. அது குழந்தை ராமருக்கு சொந்தம் என்று ஒரு சாராரின் நம்பிக்கைகளின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கி, அதுவரை அந்த நிலத்தின் உரிமையாளர்களாக இருந்த இடிக்கப்பட்ட பாபர் மசூதி நிர்வாகத்தினரிடமிருந்து கையகப்படுத்தி மத்திய அரசிடம் அளித்தது. அங்கே ராமர் கோயில் கட்ட ஒரு டிரஸ்ட்டை உருவாக்கி, அங்கே கோயில் கட்ட வகை செய்யுமாறு ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டது.

இது டைட்டில் டீட் எனப்படும் நிலம் யாருடைய சொத்து என்ற வழக்கில் வழங்கப்பட்ட விநோதமான தீர்ப்பு எனலாம். நில உடைமை சார்ந்த ஆதாரங்களைக் கணக்கில் கொள்ளாமல், ஒரு சாராரின் நம்பிக்கை என்பதற்கு அதிக மதிப்பளித்து, பிரச்சினையைத் தீர்க்க வேறு வழியில்லை என்று அளிக்கப்பட்ட தீர்ப்பு இது.

அதன்படி ஸ்ரீ ராமஜென்ம பூமி தீர்த் ஷேத்ரா என்ற பெயரில் ஒரு டிரஸ்ட் 2020ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முதலில் ராமருக்காக வழக்காடிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் கே.பராசரன் அதன் இடைக்காலத் தலைவராக்கப்பட்டார். பின்னர் அயோத்தியிலுள்ள வேறொரு ராமர் கோயில் மஹந்த் நிருத்ய கோபால் தாஸ் அதன் தலைவராக்கப்பட்டார். அந்த டிரஸ்ட் இப்போது கோயிலை ஓரளவு கட்டிமுடித்து ஜனவரி 22ஆம் தேதி அங்கே ராமரை பிரதிஷ்டை செய்யப் போகிறது. அதற்கு ஏறக்குறைய 7,000 பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்களில் பக்தர்கள் யாரும் நிகழ்ச்சியன்று அங்கே வர வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது.

**பூரி சங்கராச்சாரியாரின் எதிர்ப்பு!**

ராமர் கோயில் கும்பாபிஷேகம் சாத்திரங்களின்படி நடக்கவில்லை என்பதற்கான முதல் கண்டனம் பூரி சங்க



ராச்சாரியாரிடமிருந்து எழுந்துள்ளது. அவர் அந்த நிகழ்வுக்குச் செல்லப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.



நரேந்திர மோடி மதச்சார்பற்றவராக இல்லாமல், துணிந்து கோயில் திறப்பு விழாவை நட த்துவதை பாராட்டும் அவர், அதே சமயம் பிரதமரே ராமர் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தால் நான் அதைப் பார்த்து கைதட்ட வேண்டுமா என்றும் கேட்டுள்ளார்.

அவரைப் போன்று ஆச்சாரியார்கள் பலரும் வரும் காலங்களில் எதிர்ப்பைக் கூறலாம் அல்லது அவரும் கூட சமாதானப்படுத்தப்படலாம். ஆனால், அவருடைய எதிர்ப்பிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அவரைப் போன்ற ஆச்சாரியார்களிடம் சடங்குகளை எப்படிச் செய்வது, யார் செய்வது என்பது போன்ற அம்சங்கள் கலந்தாலோசிக்கப்படவில்லை.

இந்து கோயில்களில் தெய்வத்தை பிரதிஷ்டை செய்வது என்பது மிக முக்கியமான சடங்காகும். அனைவராலும் மதிக்கப்படும் பாரம்பரியமிக்க மடாதிபதி ஒருவரே அதைச் செய்யும் தகுதி படைத்தவர் என்பதுடன் எந்த மதப்பிரிவின் சடங்குகள் பின்பற்றப்படப் போகின்றன என்பதிலும் தெளிவு இருக்க வேண்டும்.

ஆனால் எதிர்வரும் நிகழ்வில் இதுபோன்ற அம்சங்களில் தெளிவில்லை. பாஜக, ஆர்.எஸ்.எஸ் தலைவர்கள் முக்கிய பங்கெடுக்கும் அரசியல் நிகழ்ச்சியாக உள்ளதே தவிர, ஒரு சனாதன மதம் சார்ந்த நிகழ்வாக அது இல்லை. நாட்டின் பிரதமரே ஒரு கோயிலுக்கு குடமுழுக்கு செய்வித்தால் நாட்டின் மதச்சார்பின்மை என்னவாகும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இது பாஜக, ஆர்.எஸ்.எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத் ஆகிய சங்க பரிவார் அமைப்புகளின் வெற்றி விழா கொண்டாட்டம் என்பது மட்டும் தெளிவாக இருக்கிறது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.



எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 1949ஆம் ஆண்டு டிசம்பர் 22 அன்று அவர்கள் சதி செய்து இரவோடு இரவாக மசூதி வளாகத்தினுள் கொண்டு போய் வைத்த ராமர் சிலை, அதையொட்டி செய்த பிரச்சாரங்கள், புரளிகள், மதக்கலவரங்கள், சட்டத்தை மீறி வரலாற்று சின்னமான பாபர் மசூதியை இடித்துத் தள்ளியது ஆகிய அனைத்துச் செயல்களும் இறுதியில் இந்தக் கோயில் திறப்பு விழாவில் பூர்த்தி அடைவதை கொண்டாடுகிறார்கள்.

**இந்தியா கூட்டணியின் தடுமாற்றம்!**

அப்பட்டமான இந்த அரசியல் நிகழ்ச்சியில் தெளிவாக பங்கு கொள்ள மறுத்திருப்பது சீதாராம் எச்சூரியும், சி.பி.ஐ (எம்) கட்சியும் மட்டும்தான். இது மிகவும் பாராட்டுக்குரியது. காங்கிரஸ் கட்சி முடிவெடுக்க முடியாமல் தடுமாறுகிறது. பீஹாரிலும், கர்நாடகாவிலும் இந்தியா கூட்டணி தலைவர்களுக்குள் தெளிவான கருத்தொப்புமை இல்லை. இவர்களது இத்தகைய பலவீனமே பாஜக இந்த அளவு வளர்வதற்குக் காரணம். கொள்கைப் பிடிப்பு இல்லாமல் அரசியல் செய்தால் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாது.

பீஹாரில் லாலு யாதவ் கட்சியினர் ராமர் கோயில் திறப்பு விழாவைப் பாராட்டுவது பகுத்தறிவற்ற அடிமை மனோநிலை என்று விமர்சித்துள்ளது. ஆனால் நிதிஷ் தலைமையிலான கட்சியினர் ராமர் கோயிலை இழித்துப் பேசுவது சரியல்ல என்று கண்டிக்கின்றனர். கர்நாடகாவில் ஓர் அமைச்சர் ராமர் கோயில் திறப்பு புல்வாமா போலஒருஸ்டண்ட்என்றுசொன்னவுடன், முதலமைச்சர் சீதாராமையா அதை சரிகட்ட முயற்சி செய்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்கு இந்து மதம் என்றால் என்னவென்றே தெரியவில்லை. அதனால் எங்கே ராமர் கோயில் திறப்புக்குச் செல்லாவிட்டால் இந்துக்கள் ஓட்டளிக்க மாட்டார்களோ என்று பயப்படுகிறது. அயோத்தி ராமர் கோயில் திறப்பு ஓர் அரசியல் நிகழ்ச்சி; ஆன்மிக நிகழ்ச்சியல்ல என்று அவர்களால் துணிச்சலாகச் சொல்ல முடிவதில்லை. கமல் நாத் போன்றவர்கள் நாங்கள்தான் பாபர் மசூதி வளாகத்தை வழிபாட்டுக்கு 1984ஆம் திறந்து விட்டோம் என்று பெருமை பேசும் அளவுக்கு அந்தக் கட்சியில் கருத்தியல் தெளிவின்மை கோலோச்சுகிறது.

எல்லா கட்சிகளுமே இந்து மத அடையாளவாதத்தைக் கண்டு அஞ்சுகின்றன. ராவண காவியம் படைத்த தமிழ் நாட்டில்கூட ராமர் கோயில் அரசியல் மயமாக்கப்பட்டு இந்துத்துவ கொண்டாட்டமாக நடைபெறுவதைக் கண்டிக்க தயக்கம் காட்டப்படுகிறது. பெரும்பான்மைவாதத்தைக் கண்டு அஞ்சக் கூடாது. தைரியமாக எதிர்த்து நின்றால்தான் அது பெரும்பான்மையே கிடையாது என்பது வெளிப்படும். பெரும்பான்மை என்பது ஓர் உளவியல் கட்டமைப்புதான் என்பதை உணர வேண்டும்.

**ஒரே நாடு, ஒரே கடவுள் என்பது சாத்தியமா?**

இந்து மதம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் அது பல தெய்வ வழிபாடு கொண்ட து என்பதை மறுக்கவே முடியாது. உதாரணமாக இந்துக்களின் புனித நூல் எதுவென்று கேட்டால் வேதங்கள் என்று சொல்வார்கள். வேதங்களில் ராமர் என்ற கடவுளே கிடையாது. வேதங்களில் சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களே மிகவும் குறைவாகத்தான் உச்சரிக்கப்படுகிறார்கள்.

பிற்காலத்தில் முக்கியம் அற்றவர்களாகிப் போன இந்திரன், வருணன், அக்னி போன்ற தேவர்களே வேதங்களில் பாடப்படும் முக்கிய கடவுளர்கள். ராமர், கிருஷ்ணர் எல்லாம் சுத்தமாகக் கிடையாது. அவர்கள் வேத காலத்தில் தோன்றியிருக்கவேயில்லை.

அது மட்டுமல்ல. நாட்டில் 80% மக்கள் அவரவர்கள் கிராமத்து தெய்வங்களைத்தான் வழிபடுகிறார்கள். இந்தியா முழுவதும் ஐயனார், கருப்பு போன்ற எண்ணற்ற கிராம தெய்வங்கள் உள்ளன. மக்கள் தங்கள் வாழ்வினை பராமரிப்பதாகக் கருதுவது இந்த தெய்வங்களையே. அது மட்டுமன்றி சக்தி, துர்கை, அம்மன் என்பது போன்ற பெண் தெய்வ வழிபாடே பெருவாரியான மக்களின் நம்பிக்கைக்கு ஆதாரமாக உள்ளது.

மேலும் ஒவ்வொரு மாநிலத்திலும் பிரத்யேகமாக சில கடவுள்கள் முக்கியமாக மக்களின் சிந்தனையில் இடம் பெற்றிருப்பார்கள். தமிழ்நாட்டில் முருகன் என்ற கடவுள் போல, மும்பையில் கணபதி போல ஆங்காங்கே பல கடவுள்கள் செல்வாக்கு பெற்றிருப்பார்கள். ஐயப்பன், ஷீர்டி சாய்பாபா, சந்தோஷி மாதா என்று மிகுந்த வெகுமக்கள் ஈர்ப்புள்ள தெய்வங்கள் பல.

ராமர் என்ற கடவுள் பார்ப்பனர்கள் போன்ற உயர்ஜாதி மக்களின் கடவுளே தவிர, வெகுமக்களின் கடவுள் கிடையாது. அவர்களிலும் கூட பலர் அவர்களுடைய தனிப்பட்ட இஷ்ட தெய்வங்களைத்தான் கும்பிடுவார்கள். ஒரு சிலர் ஹயக்ரீவர் என்ற தெய்வத்தை மட்டுமே கும்பிடுவார்கள்.

**கடவுள் பக்தியல்ல காரணம்!**

ராமரை முக்கிய கடவுளாக ஆர்.எஸ்.எஸ், பாஜக உருவாக்கக் காரணம் மத அடையாளவாதம்தானே தவிர பக்தியல்ல. சாவர்க்கர் ராமர்தான் இந்தியா முழுவதையும் வென்று ஒரே நாடாக அதை உருவாக்கினார் என்று எழுதியுள்ளார். அதாவது ராமர் இந்திய தேசத்தை ஒருங்கிணைத்த மன்னர் என்பது அவரது கணிப்பு. அப்படியெல்லாம் எதுவும் நடந்ததற்கு வரலாற்று ஆதாரங்கள் கிடையாது என்றாலும், ஓர் ஒற்றை இந்துத்துவ அடையாளத்தை கட்டமைக்க ராமர் அவசியமாகப்படுகிறார்.

பாஜகவுக்கோ, ஆர்.எஸ்.எஸ்ஸுக்கோ மக்கள் பக்தியுடன் ராமரை வழிபட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அயோத்தியை ஒரு இந்துத்துவ அடையாளத்திற்கான நகரமாக மாற்ற வேண்டும் என்பதுதான் அவர்கள் விருப்பம். ராமரை வழிபடத்தான் பல கோயில்கள் நாட்டில் இருக்கின்றனவே. ஆனால், அவர்கள் நோக்கம் மசூதியை இடித்த இடத்திலேயே கோயிலை கட்டி காண்பிக்க வேண்டும் என்பதுதான்.

பிரதமர் நரேந்திர மோடியே 2013ஆம் ஆண்டு, பிரதமராவதற்கு முன், முதலில் கழிவறைகளைக் கட்ட வேண்டும், பிறகு கோயில் கட்ட வேண்டும் என்று கூறியவர்தான். அப்போது அவர் வளர்ச்சியை முன்னிறுத்தும் பிரதமர் வேட்பாளராக வடிவெடுத்து இருந்தார். இப்போது ராமர் கோயிலை திறந்து வைப்பவராக விளங்குகிறார்.



**இந்தியா கூட்டணி தலைவர்கள் செல்வதற்குக் கோயிலா இல்லை?**

தாங்கள் இந்து மத விரோதிகள் என்று மக்கள் நினைத்துவிடக் கூடாது என்று இந்தியா கூட்டணி தலைவர்கள் நினைத்தால் அவர்கள் செல்வதற்குக் கோயிலா இல்லை? நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான தெய்வங்களும், கோயில்களும் நிறைந்துள்ளனவே?

ராகுல் காந்தி சென்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது தன்னை சிவபக்தன் என்றுதானே கூறிக்கொண்டார்? அப்போது அவர் ஜனவரி 22 அன்று காசி விசுவநாதர் கோயிலுக்கோ, ராமேஸ்வரத்திற்கோ செல்லலாமே அல்லது அவர் வயநாடு தொகுதிக்கு அருகிலுள்ள குருவாயூரப்பன் கோயிலுக்குச் செல்லலாமே?

பூரி சங்கராச்சாரியாரே மத சம்பிரதாயங்கள்படி திறக்கப்படாத கோயிலுக்குச் செல்ல மாட்டேன் என்று சொல்லும்போது, இந்த பாஜகஆர்.எஸ்.எஸ் அரசியல் கோயிலுக்கு இந்தியா கூட்டணியினர் செல்லாவிட்டால்தான் என்ன? அதைப் புறக்கணித்தால்தான் என்ன? மதச்சார்பின்மையைக் கூட பேச வேண்டாம். இந்து மதம் ஒருபோதும் ஒற்றை கோயிலையோ, கடவுளையோ அடையாளமாகக் கொண்டதில்லையே? பிறகு ஏன் இவர்கள் அஞ்ச வேண்டும்?

பாஜக, ஆர்.எஸ்.எஸ் கட்டிய கோயிலுக்குப் போகாவிட்டால் ஒன்றும் ஆகிவிடாது என தைரியமாக இந்தியா கூட்டணி தலைவர்கள் அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவைப் புறக்கணிக்க வேண்டும். அதுவே எழுபத்தைந்து ஆண்டு இந்துத்துவ வேலைத் திட்டத்துக்கான கண்டனமாக இருக்கும்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

# புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப் பாண்டியன் துவக்கி வைத்தனர்!

*புதுக்கோட்டை. ஜன. 11-*

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 06.01.2024 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, அனைத்து மாடுபிடி வீரர்களும் ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தஐ.சா. மெர்சி ரம்யா, தலைமையில் “ஜல்லிக்கட்டு உறுதி மொழியினை” அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் இந்த ஆண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டியாக தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டுப் போட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் காளைகள் முழு மருத்துவ பரிசோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த ஜல்லிக்கட்டுப் போட்டி அரசின் விதிமுறைகளின் படியும், கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றியும் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வுகளில் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன்

கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா , மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மண்டல இணை இயக்குநர் (கால்நடைத்துறை) (பொ) மருத்துவர் சி.இராமச்சந்திரன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், வட்டாட்சியர் இராமசாமி, த.சந்திரசேகரன், க.மதியழகன், சு.சண்முகம், எம்.பரமசிவம், சி.சண்முகம், கே.பி.கே.டி.தங்கமணி, மகேஸ்வரி சண்முகநாதன், கே.சி.சிவக்குமார், ஸ்டாலின் நாராயணசாமி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

## ஈரோடு தெற்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# தைப் பொங்கல் திருநாள் விழா!

*ஈரோடு, ஜன. 11-*

ஈரோடு தெற்கு கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் சித்தோடு சி.எஸ்.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகிற 15.01.2014, திங்கட்கிழமை அன்று, ஈரோடு மணல்மேட்டில் அமைந்துள்ள ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு.கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம்தனில் அன்று காலை 9.00 மணி அளவில், தமிழ் புத்தாண்டு மற்றும் தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு, கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படியும், ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு.கழக செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறைகளின் அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதல் மற்றும் அவர்தம் தலைமையிலும், ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணியின் சார்பில், தமிழர்களின் பாரம்பரிய இசையான தாரை, தப்பட்டை முழக்கத்துடனும், சேலம் ஜான் பாஷா குழுவினரின் கழகக் கொள்கை விளக்கப் பாடல்கள் அடங்கிய இசைக் கச்சேரியுடனும், பொங்கல் வைப்பதுடனும், தமிழர் திருநாளாம் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் தைப் தைப் பொங்கல் திருவிழா நடைபெற உள்ளது.

அதுசமயம் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி, வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து தருமாறு ஈரோடு தெற்கு மாவட்டத் தி.மு.கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணியின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# சேலம் கிழக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (12.01.2024 - வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் சேலம் கிழக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 20-01-2024 அன்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் வருகை,
2. 21-01-2024 அன்று நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு குறித்து ஆலோசனை,
3. பொங்கல் விழா,
4. OMR படிவம் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**
செயலாளர்
சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க.



அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (09.01.2024) சென்னை, கீழ்ப்பாக்கம், அரசு மனநல காப்பகத்தில், நட்புடன் உங்களோடு தொலைபேசி வழி மனநல சேவை திட்டத்தின் இரண்டாவது பிரிவினை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வெற்றியழகன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. தி.சி. செல்வவிநாயகம் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ. சங்குமணி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், அரசு மனநல காப்பகத்தின் இயக்குநர் மரு.மலையப்பன், மருத்துவ பேராசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டனர்.



அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ஆர்.காந்தி முன்னிலையில் நேற்று முன்தினம் (09.01.2024) திருவள்ளூர் மாவட்டம், உளுந்தை கிராமம், ஹூன்டாய் மொபீஸ் நிறுவனத்தில், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், எஸ்.சந்திரன், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசுப் பள்ளிகளைப் பேணிக் காப்பதே - மேம்படுத்துவதை நமக்கான பொறுப்பாக எடுப்போம்!

# 'நம் பள்ளி! நம் பெருமை!' எனும் கூற்றைக் கடமையாக முன்னெடுத்துச் செயல்படுத்துவோம்!

## பள்ளிக் கல்வித் துறை சார்பில் 'விருதுகள்' திட்ட தொடக்க விழாவில் முதல்வர் உரையை - அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி வாசித்தார்!

சென்னை, ஜன. 11- பள்ளிக் கல்வித் துறை சார்பில் நேற்று முன்தினம் (9.1.2024) சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற "விழுதுகள்" அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பு தொடக்க விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துரையை, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாசித்தார்.

அவ்வுரையில் முதல்வர் அவர்கள், 'அரசுப் பள்ளிகளைப் பேணிக் காப்பதை -மேம்படுத்துவதை நமக்கான பொறுப்பாக எடுப்போம்!" என்றும், "நம் பள்ளி! நம் பெருமை!" என்றும் குறிப்பிட்டார்.

அவ்வுரை வருமாறு: -

தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாகத் திகழ்வதற்கு, மிக முக்கியக் காரணம் கல்வியே. அத்தகைய கல்வியை அனைவருக்குமான தாக மாற்றிய பெருமை, நம் அரசுப் பள்ளிகளையே சாரும்.

தொடக்கக் காலகட்டம் முதல், இன்றைய நாள் வரை, அரசுப் பள்ளிகளே அனைவருக்குமான கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய சிறப்புக்குரிய அரசுப் பள்ளிகளில் படித்து, இன்றைக்கு வாழ்க்கையிலும், பல்வேறு துறைகளி லும் சிறந்து விளங்கி, பல உயரங்களை எட்டியிருக்கிற, உங்கள் எல்லோரையும் மனதார வாழ்த்துகிறேன்.

நாம் படித்த பள்ளிக்காக, நாம் எல்லோரும் திரும்ப, ஓரிடத்தில் ஒன்று கூடியிருக்கிறோம் என்பது மிகவும் முக்கியமான தருணம். இப்போது முதல், நாம் படித்த அந்த அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஊக்கமாகவும், அந்தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு நாம் உறுதுணையாகவும் இருப்பதோடு, அந்தப் பள்ளிக்கும் ஊருக்கும் இணைப்பை ஏற்படுத்துகிற, இணைப்பு பாலமாகவும், நாம் எல்லோரும் இருக்க வேண்டும்.

'நம் பள்ளி, நம் பெருமை!' என்கிற முழக்கத்திற்கு முன்னாள் மாணவர்களாகிய நீங்கள்தான் சொந்தக்காரர்கள். நீங்கள்தான் 'விழுதுகள்'. விழுதுகளாகிய நீங்கள் எல்லாம், ஒன்று சேர்ந்து "நம் பள்ளி நம் பெருமை" என்ற கூற்றை நிலைநிறுத்த வேண்டும். அதற்கு நாம் அனைவரும் பள்ளி மேலாண்மைக் குழுவோடு இணைந்து நம் பள்ளியின் மேம்பாட்டிற்காகச் செயலாற்ற வேண்டும்.

விழுதுகளாகிய ஒவ்வொருவரும் நம்முடைய அரசுப் பள்ளிகளைப் பேணிக் காப்பதையும், அவற்றை மேம்படுத்துவதையும் நமக்கான பொறுப்பாக எடுப்போம், அடுத்த தலைமுறையினருக்கான நம்பிக்கையாகவும் வழிகாட்டியாகவும் இருப்போம்.

நம் பள்ளி, நம் பெருமை என்பதனை நம் கடமையாக முன்னெடுத்துச் செயல்படுத்துவோம்.

இவ்வாறு அவ்வுரையில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

### தமிழ்நாடு முழுவதும்

# 32 லட்சம் தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.11- முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள 32 லட்சம் தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் காந்தி ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (09.01.2024) திருவள்ளூர் மாவட்டம், உளுந்தை கிராமம், ஹூன்டாய் மொபீஸ் நிறுவனத்தில், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு:-

முதலமைச்சர் அவர்களால் மக்களை தேடி மருத்துவம் திட்டம் 05.08.2021 அன்று, கிருஷ்ணகிரி மாவட்டம், சாமணப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம் இல்லங்களுக்கே சென்று உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, இயன்முறை மருத்துவ சேவைகள், சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல் மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்கான பரிந்துரை வழங்குவதுடன், தொடர் கவனிப்பும் வழங்கப்படுகிறது. இது வரை இந்த திட்டத்தின் கீழ் 1,00,69,713 பேர் பயனடைந்துள்ளனர். அதாவது 39,42,407 பேர் உயர் ரத்த அழுத்த நோய் சிகிச்சையும், 27,55,155 பேர் நீரிழிவு நோய் சிகிச்சையும், 20,07,842 பேர் உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் சிகிச்சையும், 4,28,387 பேர் நோய் ஆதரவு சிகிச்சையும், 9,34,770 பேர் இயன்முறை சிகிச்சையும், 1,152 பேர் சிறுநீரக நோய்க்கு சுயடயாலிஸ் சிகிச்சையும் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தின் முதலாவது பயனாளிக்கும் 50 இலட்சமாவது பயனாளிக்கும் மருந்து பெட்டகத்தை நேரடியாக வழங்கினார். பின்னர் 60, 75, 80, 90 இலட்சமாவது பயனாளிக்கு நான் நேரடியாக சென்று மருந்து பெட்டகங்களை வழங்கினோம். மீண்டும் முதலமைச்சர் அவர்கள் 1 கோடியே ஒன்றாவது பயனாளிக்கு 29.12.2022 அன்று திருச்சி மாவட்டம், சன்னாசிப்பட்டிக்கு நேரடியாக வந்து மருந்து பெட்டகங்களை வழங்கினார். அந்த வகையில் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தில் தொற்றா நோய் பரிசோதனை சேவைகள் வழங்கும் நேரத்தில், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பாலான மக்கள் வேலைக்கு செல்வதால், இச்சேவை கிடைக்காமல் விடுபடு கின்றனர்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் தனி அக்கறை கொண்டு தொழிற்சாலைகளிலும் கட்டுமானம் உள்ளிட்ட அமைப்பு சாரா தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் இன்று திருவள்ளூர் மாவட்டம், உளுந்தையில் ஹூன்டாய் மோபிஸ் (Hyundai Mobis) நிறுவனத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ரூ.43,89,000 செலவில், 711 தொழிற்சாலைகளிலுள்ள 8.35 இலட்சம் தொழிலாளர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கும் வகையில் இந்த திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள 32 இலட்சம் தொழிலாளர்களும் பயனடையும் வகையில் இந்த திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், திருத்தனி சந்திரன், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. தி.சி. செல்வவிநாயகம் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# 'கேலோ இந்தியா' இன்று இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜன. 11 –

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 'கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு தேர்வுப் போட்டிகள் 2023' செய்தி வெளியீடு வருமாறு:

ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் 17 வயதிற்குட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020 ஆம் ஆண்டு போட்டிகள் நடத்தப்படாத நிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டிற்கு 18 வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022 ஆம் ஆண்டிற்கு மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான 'கேலோ இந்தியா' இளைஞர் விளை யாட்டுப் போட்டிகள் 19.01.2024 முதல் 31.01.2024 வரை சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் நடத்தப்பட உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அதற்கான தேர்வுப் போட்டிகள் கீழ் காணும்படி நடைபெறவுள்ளது.

குத்துச்சண்டை 11.1.2024 காலை 7.00 மணி, ஜவஹர்லால் நேரு விளையாட்ட ரங்கம், சென்னை. (மாணவிகள்) 48கி, 50கி, 52கி, 54கி, 60கி, 63கி, 66கி, 70 கி

11.01.2024/ காலை 7.00 மணி பளுதூக்குதல் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை. மாணவர்கள் 61கி, 67கி, 81கி, 102கி, + 102கி, மாணவிகள் 40கி, 45கி, 59கி, 71கி

மேசைப்பந்து 11.01.2024/ காலை 7.00 மணி ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை. இரட்டையர் (ஒரு அணி)

11.01.2024 காலை 7.00 மணி களரிபயட்டு நேரு பார்க் விளையாட்டரங்கம், சென்னை (மாணவிகள்) Sword & Shield with flexible Sword (ஒரு அணி)

11.01.2024/ காலை 7.00 மணி, நீச்சல் நீச்சல் வளாகம், வேளச்சேரி, சென்னை 50மீ ப்ரீ ஸ்டைல் மற்றும் 100மீ பட்டர் ப்ளை 50மீ ப்ரீ ஸ்டைல், 100மீ ப்ரீ ஸ்டைல், 50மீ பட்டர் ப்ளை. 100மீ பட்டர் ப்ளை, 200மீ பட்டர் ப்ளை

விதிமுறைகள்: பங்கு பெறும் வீரர்கள் 01.01.2005 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும். பங்கு பெறும் வீரர்கள் கீழ்க்கண்ட சான்றிதழ்களில் ஏதேனும் இரண்டு சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஆதார் அடையாள அட்டை (அல்லது) பாஸ்போர்ட்

பிறப்பு சான்றிதழ் (குறைந்தது 5 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 01.01.2023 அன்றோ, அல்லது அதற்கு முன் நகராட்சி/ கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கப்பட்டது) பள்ளி சான்றிதழ்கள் , இருப்பிடச் சான்றிதழ் பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப் படாது.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிறுவேடல் வெ.கணேசன்
### சனவரி 11 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவேடல் கிளைக் கழகச் செயலாளர் – வாலாஜாபாத் ஒன்றிய இணைச் செயலாளர் – ஒன்றிய துணைச் செயலாளர் – மாவட்ட பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜாபாத் ஒன்றியக்குழு உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

வாலாஜாபாத் நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றதோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'சிறை சென்ற செம்மல்' என்று அழைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கழக மாநில நெசவாளர் அணிச் செயலாளர்

## சிந்து ரவிச்சந்திரன் - டி.சேகர் தாயார் மறைவு

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

தி.மு.கழக மாநில நெசவாளர் அணிச் செயலாளர் ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் சிந்து ரவிச்சந்திரன் மற்றும் டி.சேகர் ஆகியோரின் தாயார் திருமதி. எஸ்.ஏ. தனபாக்கியம் தேவராஜன் நேற்று முன்தினம் (9.1.2024 - செவ்வாய்க்கிழமை) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சிந்து ரவிச்சந்திரன் மற்றும் டி.சேகர் ஆகியோருக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நேற்று (10.1.2024 - புதன்கிழமை) காலை 9.00 மணி முதல் 10 மணிக்குள்ளாக கோபி மின் மயானத்தில் நடைபெற்றது.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் தெற்கு ஒன்றியம், ஜமீன் எண்டத்தூரைச் சேர்ந்த எண்டத்தூர் **வி.ஸ்ரீதரன்** அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 09.01.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## தி.மு.க. விவசாய அணி

## மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம்!

### தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் 13-1-2024 சனிக்கிழமை மாலை 3.00 மணி அளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" கழக விவசாய அணித் தலைவர் என். கே.கே.பெரியசாமி தலைமையில், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் சிறப்புரையாற்றிட, தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்

பொருள்: சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 09.01.2024

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வடகாடு ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி பகுதியில், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள அங்கன்வாடி மைய கட்டடப் பணிக்கு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 06.01. 2024 அன்று அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.செல்வி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி. மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), வடகாடு ஊராட்சிமன்றத் தலைவர் மணிகண்டன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.





# கடலால் பிரிக்கப்பட்டுள்ள தமிழ் சொந்தங்களை தமிழால் இணைக்கும் விழா !

# அயலகத் தமிழர் தினம்-2024

நாள் : 11.01.2024 நேரம் : காலை 09.30 முதல் இரவு 8.00 மணி வரை
இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை.

வரவேற்புரை :

திரு. **கார்த்திகேய சிவசேனாபதி**
தலைவர், அயலகத் தமிழர் நல வாரியம்

முன்னிலை

திரு. **செஞ்சி கே.எஸ்.மஸ்தான்**
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

விழாவைத் தொடக்கி வைத்து பேருரை

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்

சிறப்பு விருந்தினர்

திரு. **தங்கம் தென்னரசு**
மாண்புமிகு நிதி,மனிதவள மேலாண்மை மற்றும் தொல்லியல் துறைஅமைச்சர்

முனைவர் **பழனிவேல் தியாகராஜன்**
மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா**
மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்

திரு. கவிப்பேரரசு **வைரமுத்து**

திரு. **கலாநிதி வீராசாமி**
நாடாளுமன்ற உறுப்பினர்

அனைவரையும் அன்புடன் வரவேற்கும்.

**R.விஜயகுமார்** B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்

**L.P.நெடுஞ்செழியன்** B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்

**K.S.M.மொக்தியார் அலி மஸ்தான்** B.Tech.,IT.LLB.,
தலைவர் - செஞ்சி பேரூராட்சி, விழுப்புரம் மாவட்டம்.

JN ADS 9790242624 digital printing-Gingee



# இடம் பொருள் கலைஞர் 52

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மதுரை உயர்நீதிமன்றக் கிளை.**



## மதுரை உயர்நீதிமன்றக் கிளை

### தமிழ்நாட்டு நீதித்துறையில் ஒரு மைல்கல்!

தமிழ்நாட்டில் உள்ள நகரங்களில், மதுரைக்கு என்றும் தனிச் சிறப்பு உண்டு. மூன்றாம் தமிழ்ச் சங்கம் அமைத்து, முத்தமிழ் வளர்த்த இந்த மதுரைதான, தீர விசாரிக்காமல் 'கண்ணால் கண்டதே உண்மை, காதால் கேட்டதே நியாயம்' என்று நம்பி கோவலனுக்குத் தண்டனை கொடுத்த பாண்டிய மன்னனை, அவனது சிம்மானசத்திலிருந்து கீழே தள்ளியது.

சிலப்பதிகாரம் சொல்லும் அந்தச் செய்தியில் மறைபொருளாக உள்ள இன்னொரு விஷயம்... அன்றெல்லாம், சாமானியர்களும் தங்களுக்கான நீதியை வேண்டி அரண்மனைகளை எளிதாக அணுக முடிந்தது என்பது..! ஆனால், இன்று ஒருவர் தனது வழக்கை உச்ச நீதிமன்றம் கொண்டு செல்ல வேண்டும் என்றால், அதற்காக அவர் கொடுக்க வேண்டிய விலை அதிகம். பொருள் செலவு, நேர செலவு, மொழி தெரியாத ஊரில் ஏற்படும் அலைச்சல் எனப் பல தடைகளைத் தாண்டி வர வேண்டிய சூழல் உள்ளது.

அதனால்தான் இன்று பல மாநிலங்களில், உச்ச நீதிமன்றக் கிளைகள் அமைக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் எழத் தொடங்கியுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் கிளைகள் பற்றி இன்றுதான் பலர் பேசுகிறார்கள். ஆனால், 1970 களிலேயே, உயர் நீதிமன்றத்துக்கே கிளைகள் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதன் பலனாக நமக்குக் கிடைத்ததே மதுரை உயர் நீதிமன்றக் கிளை.

#### அண்ணல்... அடிக்கல்...!

தமிழ்நாட்டுக்கும் புதுச்சேரிக்கும் சேர்த்து நீதிபரிபாலனம் செய்து வருகிறது சென்னை உயர் நீதிமன்றம். சென்னையில் உயர் நீதிமன்றம் அமைந்திருப்பதால் கடைக்கோடி மாவட்டங்களான கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சார்ந்த மக்கள், உயர் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்றால் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது.



இதனால் நேர விரயமும், பொருளாதார விரயமும் ஏற்பட்டு, தங்கள் வழக்குகளை நடத்துவதில் பல இன்னல்களைச் சந்தித்து வந்தனர், தென் மாவட்ட மக்கள்.

இந்த நிலையில், நீதியை அணுகுவதில் தென்மாவட்ட மக்களுக்கு உள்ள இடர்ப்பாடுகளை உணர்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவர்களின் எண்ணங்களை எதிரொலிக்கும் வண்ணம், சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையை மதுரையில் நிறுவ வேண்டும் என்று 1972 ஆம் ஆண்டு முதல் பலமுறை தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். அந்தத் தொடர் வலியுறுத்தல்கள் காரணமாக, தென் தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை நிறுவுவதற்கான ஒன்றிய அரசின் ஒப்புதல், 1996 ஆம் ஆண்டில் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து, மதுரை அருகே 1997-1998 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றக் கிளை அமைக்க, உலகனேரியில் நிலம் கையகப்படுத்தும் பணிக்காக 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று முடிவடைந்தது.

அடுத்த கட்டமாக, 2000-2001 நிதிநிலை அறிக்கையில், "கடந்த பல ஆண்டுகளாக மதுரை மாநகரில் சென்னை உயர் நீதிமன்றக் கிளை ஒன்றை அமைக்க, நாம் எடுத்த முயற்சி கனிந்துள்ளது. தமிழக நீதி பரிபாலன வரலாற்றில் ஒரு மைல் கல்லாகத் திகழும். இதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுப் புதிய நீதிமன்றக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, வரும் ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று நடைபெற உள்ளது. இதன் வாயிலாக, தென்மாவட்ட மக்கள் நீதியைப் பெறுவது எளிமையாக்கப்படுகிறது" என்று முத்தமிழறிஞர் கலைஞர் குறிப்பிட்டார்.

தான் ஆட்சியில் இருக்கும் போதெல்லாம், அண்ணல் அம்பேத்கரின் நினைவாக ஏதேனும் ஒரு திட்டத்தையோ, முன்னெடுப்பையோ மேற் கொள்வது கலைஞரது வழக்கம். அப்படியேதான் அண்ணலின் பிறந்த நாளையொட்டி ஒரு நாளுக்கு முன்னதாக மதுரை உயர் நீதிமன்றக் கிளைக்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

#### தலைமை நீதிபதியின் பொருத்தம்!

அடிக்கல் நாட்டு விழாவில், கலைஞரின் தலைமையில், அன்றைய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அடிக்கல் நாட்டினார். பிறகு தனது உரையின் போது முத்தமிழறிஞர் அவர்கள், "இந்த உயர்நீதிமன்றக் கிளைக் கட்டடத்திற்காக நீதியரசர் திரு.ஆனந்த் அவர்கள் அடிக்கல் நாட்டுவது முற்றிலும் பொருத்த முடையதாகும். ஏனெனில், அவர் சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில்தான் இந்தக் கிளை அமைவதற்கான திட்டம் ஒரு உறுதியான வடிவத்தைப் பெற்றது.

நீதியரசர் டாக்டர் ஆனந்த் அவர்கள் நமது மாநிலத்தில் தலைமை நீதிபதியாகப் பணிபுரிந்த காரணத்தால் தமிழக மக்களின் மீது அவர் பேரன்பும், பற்றும் கொண்டுள்ளவர் என்பதை நான் அறிவேன்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும்போது, "அஸ்ஸாம், மராட்டியம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கு இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன என்பதை நான் அறிகிறேன். உயர் நீதிமன்றத்தை அணுகும் மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதன் காரணமாக, அதற்கு உதவும் வகையில், இதுபோன்ற கிளை நீதிமன்றங்கள் பல காலப் போக்கில் தொடங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இத்திட்டம் நிறைவேறுவதற்காக நீண்ட காலமாக முயற்சிகளை மேற்கொண்டவன் என்ற முறையில், சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் இந்த மகிழ்ச்சியில் நானும் பங்குகொள்கிறேன்" என்றார்.

அடிக்கல் நாட்டு விழாவைத் தொடர்ந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில் திராவிடக் கட்டடக் கலையம்சத்துடன் கூடிய உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று, 2004 ஆம் ஆண்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த ஒரு காரணத்துக்காகவேனும் தென்மாவட்ட மக்கள், தெற்கிலிருந்து உதித்த சூரியனை மனதில் ஏந்தியிருப்பர்..!

**...வலம் வருவோம்**

### அடிக்கல்லுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு!

மதுரையில் 'எய்ம்ஸ்' மருத்துவமனை அமைக்கிறோம் என்று சொல்லி, ஒரு செங்கலை மட்டும் அடிக்கல்லாக நாட்டிவிட்டுப் போனார்கள். இதுவரை நிதி ஒதுக்கீடுகூட முழுமையாக, முறையாக ஒதுக்கப்படவில்லை. அந்த லட்சணத்தில்தான் ஒன்றிய அரசு இயங்குகிறது. அவர்கள் எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞரிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

காரணம், 'மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை அமைப்போம்' என்று உறுதி கூறியதுடன், அனுமதியையும் வாங்கி, நிலங்களையும் கையகப்படுத்தி, அடிக்கல் நாட்டு விழாவுக்கு ஒரு நாள் முன்பே கட்டடம் கட்டுவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்தார் கலைஞர். இதுகுறித்து, அவர் தனது உரையில் கூறும்போது, "இந்தக் கிளை, மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் இந்த அரசு நிறைவேற்றித் தரும். இங்குக் கட்டடம் கட்டுவதற்காக 75 ஏக்கர் நிலத்தினை 45.50 இலட்சம் ரூபாய் செலவில் இந்த அரசு கையகப்படுத்தி வழங்கியுள்ளது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இங்கு கட்டப்படவுள்ள கட்டடத்திற்குரிய வரைபடங்கள் அரசுக்கு வந்துள்ளன. அந்த வரைபடங்களைத் துணையாகக் கொண்டு, இங்கு கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய செலவினமாக 56.45 கோடி ரூபாயை நேற்றைய தினம் அனுமதித்துள்ளேன் என்பதனை இவ்வேளையில் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

மேலும் 1996-2001 ஆட்சி காலத்தில், பல்வேறு நீதிமன்றங்களும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகளும் என 39 கோடி ரூபாய் செலவில் தமிழகம் முழுவதிலும் கட்டப்பட்டன. 1996 முதல் 2000 வரையிலான நான்கு ஆண்டுகளில் மட்டும் 101 புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

### நவீன கவிதையில் பெரியார்!

***மாரீசமானை வேட்டையாடப் போனவனை மனக்குகையில் எழுந்த சிறுத்தைதான் வேட்டையாடியது***

– என மூன்றே வரிகளில் ராமாயணம் பற்றி தந்தை பெரியாரின் பார்வையைச் சுருக்கமாகக் கவிதையாக்கியுள்ளார் எழுத்தாளர் சுகுணா திவாகர்.



'பெரியாரை நவீன கவிதைக்குள் கொண்டு வர முடியுமா?' என்பதைச் சவாலாக எடுத்துக் கொண்டு பெரியார் குறித்துத் தான் எழுதிய நவீன கவிதைகளைத் தொகுப்பாக்கி 'அங்கிருந்துதான் வந்திருக்கிறோம்' என்ற தலைப்பில் கொண்டு வந்துள்ளார் நூலாசிரியர். அதனை கருப்புப் பிரதிகள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

புத்தகத்தின் அட்டைப்படம் தொடங்கி கடைசிப் பக்கம் வரை பெரியார் நவீனப்பட்டு மிளிர்கிறார். சமகால சிக்கல்களை பெரியாரிய பார்வையில் கவிதையாக்கியது மட்டுமின்றி, பெரியாரின் கடந்த காலச் செயல்பாடுகளையும் நவீன கவிதையில் அடக்கியுள்ளார். புதுமைப் பித்தன் காலத்திலேயே 'பெரியார் ராமசாமி' என்ற பெயர் சிறுகதைகளில் தோன்றத் தொடங்கி விட்டது. இன்றைக்கும் பல சிறுகதைகளில் பெரியார் நம்முடன் கைப்பிடித்து நடை போடுகிறார். சுகுணா திவாகரின் இந்தத் தொகுப்பு பெரியாரை நவீன கவிதை உலகத்துக்கு அழைத்து வந்துள்ளது. நாம் எங்கிருந்து வந்தோம் என்பதை இந்த 72 பக்க கவிதைத் தொகுப்பான 'அங்கிருந்துதான் வந்திருக்கிறோம்!', நமக்கு நினைவூட்டுகிறது.

### :ப்ளாஷ்பேக்



#### இலக்கியமும் கைத்தறியும்!



ராஜேந்திரன்

1986 ஆம் ஆண்டில் சென்னை சூளைமேட்டில், கழக இலக்கிய அணி சார்பில், நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான தளபதியார் அவர்கள் அந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார். இலக்கிய அணி நிர்வாகிகளை அறிமுகம் செய்துவைத்து அனைவருக்கும் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்தினார். நான் சுமார் 40 ஆண்டு காலம் கழக உறுப்பினராகத் தொடர்வதைப் பெருமையாக உணர்கிறேன்.

**-ஈ.ராஜேந்திரன்,**
**முன்னாள் அமைப்பாளர், கழக இலக்கிய அணி, ஆவடி.**
**சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### காமராசருக்காகக் கலங்கிய கலைஞர்!

**1975-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் தேதி காமராசர் மறைந்தபோது, தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அங்கேயே அடக்கம் செய்ய, அவரது கட்சியினர் எண்ணினர். ஆனால், அதை மறுத்த கலைஞர், ராஜாஜி மண்டபத்தில் காமராசர் உடலை அஞ்சலிக்கு வைத்தார். பின்னர் கிண்டி காந்தி மண்டபத்துக்கு அருகில், புதர் மண்டிக் கிடந்த இடத்தை ஒரே இரவில் சுத்தம் செய்து, பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தும் வகையில் மாற்றியமைத்து, அரசு மரியாதையுடன் அடக்கம் செய்தார். அத்துடன் 'காமராசர் நினைவு மண்டபம்' எழுப்பினார். கடற்கரைச் சாலைக்கு காமராசர் பெயர் சூட்டினார். விருதுநகரில் காமராசர் பிறந்த இல்லத்தை நினைவிடமாக மாற்றினார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 356




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131